People’s Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

28.2.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை,
சென்னை 600 02

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.2.2011 முதல் 28.2.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

## 01-02-2010 முதல் 28-02-2010 முடிய இம்மாதத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 5 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 149 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 24 |
| 5. | வகுப்பறை வன்முறை | 32 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 20 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 22 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 5 |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 35 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 3 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 5 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 9 |
| 17. | மணல் கொள்ளை | 13 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | 1 |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 1 |
| 22. | பொதுவானவை | 15 |
| | மொத்தம் | 344 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்



(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-2
# 1. 2.2010 முதல் 4. 2.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 330. | 01.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அவனியாபுரம் ஜெயபாரத் குடியிருப்பைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன்(36) அரசு மருத்துவமனை மருத்துவர், மனைவி ரேணுகாதேவி(32) இவர் பொன்னகரம் இ.எஸ்.ஐ., மருத்துவமனை மருத்துவர். கணவன் மனைவி குடும்ப தகராறில் கணவர் தாக்கியதாக சிகிச்சை பெற்றுவரும் ரேணுகாதேவி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 331. | 01.2.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் குறிஞ்சிப்பாடி அடுத்த ஆயிப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த பழனி மகள் பிரியா(20)வுக்கு. வடலூர் அடுத்த சந்தை வெளிப்பேட்டையைச் சேர்ந்த கலியபெருமாள் மகன் ஜெயசீல (28)க்கும் நடக்க இருந்த திருமணத்தின்போது மாப்பிள்ளை ஜெயசீலன் மாயமானார். இந்நிலையில் எம்.பி.ஏ., கல்லூரி மாணவர் கண்ணாதாசனுக்கும் பிரியாவுக்கும் திருமணம் நடந்தது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 332. | 01.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் தேவி நகரைச் சேர்ந்த செல்வி(30) டி.பி.கே., ரோடு நத்தவனம் தெருவைச் சேர்ந்த சார்லஸ்(28) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். திருமணத்திற்குப் பின் தாயார் லூர்துமேரி பேச்சை கேட்டு சார்லஸ் வரதட்சணை கொடுமை. செல்வி புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என செல்வி கோர்ட்டில் மனு. | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தினத்தந்தி |
| 333. | 01.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் நரிக்குடி அருகேயுள்ள தாமரைக்குளம் கிராமத்தில் திருமாளவன் படம் போஸ்டரை ஒட்டியதற்காக இருதரப்பினரிடையே கல்வீச்சு மற்றும் | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மோதல். 4 பெண்கள் உள்பட 5 பேர் காயம். இதில் 10 வீடுகள் சேதம். ஒரு கடைக்கு தீ வைக்கப்பட்டது. | | |
| 334. | 01.2.2011 | **தேனி மாவட்டம்:** போடி அருகே மேலச் சொக்கநாதபுரத்தைச் சேர்ந்த பாலா(22) மனைவி கவிதா(19). திருமணமாகி 3 மாதங்களே ஆன நிலையில் கவிதாவை காணவில்லை. கவிதாவை அதே பகுதியைச் சேர்ந்த செல்வம்(25) கடத்திச் சென்றதாக பாலா புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 335. | 01.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** கல்லல் அருகே சின்ன நாச்சியார்புரத்தைச் சேர்ந்த மருதுபாண்டியர்(55) மனைவி உஷா(28). கணவன் மனைவி தகராறில் உஷா கோபித்துக் கொண்டு பொய்யாலூரில் உள்ள தாய் வீட்டிற்கு வந்தார். ஆத்திரமடைந்த மருதுபாண்டியன் உஷாவை வெட்டிக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | ஆனந்தகுமார் |
| 336. | 01.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தேவகோட்டை தாலுகாவைச் சேர்ந்த ராஜா மனைவி அமுதா(28). திருமணமாகி 3 வருடங்கள் ஆன நிலையில் சமையல் செய்யும்போது தீ பிடித்து அமுதா இறந்ததாக புகார். மகளின் மரணத்தில் மர்மம் இருப்பதாக அமுதாவின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | ஆனந்தகுமார் |
| 337. | 01.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை பையூர் பலம்மலைநகர் நரிக்குறவர்களுக்கு அரசு சார்பில் கட்டிக் கொடுத்த வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் முருகன் படுகாயம். வீட்டின் மேற்கூரை மோசமாக இருப்பதாக ஆட்சியாளரிடம் மனு கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என முருகன் புகார். | ஊழல் | ஆனந்தகுமார் |
| 338. | 01.2.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் தாலுகா, சோழபாண்டிபுரம் கிராமத்தில் வசிக்கும் கதிர்வேல்(40) மனைவி பார்வதி(35). பார்வதியை பொது இடத்தில் நிர்வாணப்படுத்தி துன்புறுத்தியதாக கணவர் கதிர்வேல் | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராமன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீது பார்வதி புகார். | | |
| 339. | 01.2.2011 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி வட்டம், காட்டுகூடலூர் கிராமத்தைச் சேர்ந்த மாயவன் மகள் குறிஞ்சி. அதே பகுதியில் வசிக்கும் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த வெங்கடேசன் பொது இடத்தில் சாதி பெயரைச் சொல்லி தாக்கியதாக குறிஞ்சி புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஜெயராமன் |
| 340. | 01.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி திருவிளைநகர் ஆதிலிங்கம் மனைவி சுமதி. சுமதியை அடித்துக் கொன்று கால்வாயில் வீசியதாக கணவர் ஆதிலிங்கம் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | ஜயப்பன் |
| 341. | 01.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை அம்பை தாலுகா, வி.கே.புரம் அருகே இருதயகுளம் கிறிஸ்தவ கொடி ஆலயம் பிரச்சனை தொடர்பாக இந்து, முன்னணி, கிறிஸ்தவர், காவல்துறையினரிடையே மோதல். மோதலில் இந்திராவும், உதவி ஆய்வாளர் காளியப்பன் காயம். பங்கு தந்தை அந்தோணி சேவியர் உட்பட 25 பேர் மீது வழக்கு. | பெண்கள் மீதான வன்முறை & மோதல் | S. கணேசன் |
| 342. | 01.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி மாவட்டம், தின்னாங்கோடு மாணவி ஆஷாவை ஆட்டோவில் கடத்தல். | குழந்தைகள் மீதான வன்முறை | ஜயப்பன் |
| 343. | 01.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி விளவன்கோடு வட்டம், கருங்கல் அருகே அடிகோட்டில் சார்பு ஆய்வாளர் யோவன் என்பவர் வாலிபரை தாக்கிய சம்பவத்தில் பொது மக்கள் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | ஜயப்பன் |
| 344. | 01.2.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** விழுப்புரம் சங்கராபுரம் அரசு பெண்கள் பள்ளியில் படிக்கும் மாணவியிடம் தலைமையாசிரியர் கிருஷ்ணன் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக மாணவிகள் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை & வகுப்பறை வன்முறை | ஜெயராமன் |
| 342. | 2.2.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி எம்.கே.வி நகரைச் சேர்ந்த மேனகா(70) தனது மகன், மகள் ஆதரவுன்றி மாநகராட்சி பூங்காவின் பம்பிங் நிலையத்தில் | முதியவர்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தங்கியிருந்தார். மூர்த்திங்கர் தெருவைச் சேர்ந்த புரோக்கர் குமார்(40) குடிபோதையில் மூதாட்டியிடம் சில்மிஷம் செய்தபோது மூதாட்டியின் அலறல் கேட்டு அக்கம் பக்கத்தினர் குமாரை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். | | |
| 343. | 2.2.2011 | **சென்னை மாவட்டம்:** பெரம்பலூர் காட்பாடியைச் சேர்ந்த அரிகிருஷ்ணன்(26). வியாசர்பாடி குற்றப்பிரிவு காவலில், காவல் நண்பர்கள் குழுவில் இருந்து வந்தார். தானும் காவலர் என கூறி பலரிடம் லஞ்சம் வாங்கியதாக அரிகிருஷ்ணன் மீது புகார். | லஞ்சம் | தினகரன் |
| 344. | 2.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** பெரம்பூர் சிறுவள்ளுவர் ரோடு பகுதியில் ஆதரவற்றோர் விடுதி உள்ளது. இங்கு தங்கிப் படிக்கும் 6 வயது சிறுமியை. வேன் டிரைவர்கள் ஜான்பால்(25). பிரகாஷ்(34) சிறுமியிடம் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக இருவர் மீது விடுதி நிர்வாகி விஜயபானு புளியந்தோப்பு துணை கமிஷ்னரிடம் புகார். | குழந்தை மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 345. | 2.2.2011 | **பொள்ளாச்சி மாவட்டம்:** பொள்ளாச்சி கோலார்பட்டியைச் சேர்ந்த செல்லம்மாள் மகள்கள் நாச்சம்மாள் சாவித்திரி. சொத்து தகராறில் நாச்சம்மாளின் கணவர் கண்ணப்பன், சாவித்திரி மீது மண்ணெண்ணெயை ஊற்றி கொழுத்தியதில் சிகிச்சை பலனின்றி சாவித்திரி மரணம். கண்ணப்பன் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 346. | 2.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** சத்தியமங்கலம் வடக்குபேட்டை அண்ணாநகரில் வசிப்பவர் வினோத்குமார் மனைவி கோமதி(27). கணவன் மனைவி குடும்பத் தகராறில் தாய் வீட்டிற்கு வந்தார் கோமதி. பின்னர் தாய் வீட்டில் இருந்து கணவர் வீட்டிற்கு சென்ற 8 நாளில் கோமதி தூக்குப் போட்டுத் தற்கொலை. தனது மகளின் சாவில் மர்மம் இருப்பதாக | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோமதியின் தந்தை புகார். | | |
| 347. | 2.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** கோபி முதியனூரைச் சேர்ந்த குருசாமி மகன் ராமன்(14). இவர் கொடி வேரி பகுதியிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் விடுதியில் தங்கி 9ம் வகுப்பு படித்து வந்தார். 26 தேதி விடுமுறைக்கு வீட்டிற்கு செல்வதாக சென்ற மாணவன் ராமனை காணவில்லை என புகார். | மாணவர் மாயம் | தினகரன் |
| 348. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே மண்ணாடிமங்கலம் ஊராட்சி, கண்ணுடையாள்புரத்தைச் சேர்ந்த முத்தையா(30) மகன் சிவா(7). சிவாவிற்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு சோழவந்தான் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் இல்லாததால் ஊழியர்கள் சிகிச்சை அளித்ததால் சிறுவன் சிவா இறந்ததாக புகார். | அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | தினமலர் |
| 349. | 2.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் மாலப்பட்டியைச் சேர்ந்த பாலாஜி(16) பத்தாம் வகுப்பு படித்த பாலாஜியை காணவில்லை என புகார். திண்டுக்கல்லில் இருந்து பீகாரில் உள்ள போர்வெல் நிறுவனத்தில் விற்கப்பட்ட சிறுவர்கள் பாலாஜி, மற்றும் சையது வசிம்(14) இருவரையும் காவலர்கள் மீட்டனர். மாணவர்களை கடத்தி விற்ற புரோக்கர்கள் நாகராஜ்(47) ரங்கசாமி(45) கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 350. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சாப்படூரைச் சேர்ந்த மகேந்திரன் மகள் நந்தினி(21) அதே பகுதியைச் சேர்ந்த சுரேஷ்(25) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். சுரேஷ் ஏமாற்றியதால் மனமுடைந்த நந்தினி தன் தாயுடன் விஷம் குடித்துத் தற்கொலை. கிராம மக்கள் சாலை மறியல். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 351. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எஸ்.ஆர்.பி.சுரேந்திர நகரைச் சேர்ந்த குமரவேலு(38) மனைவி சிவப்பிரியா(31). கூடுதல் | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரதட்சணைக் தராததால் குமரவேலு இரண்டாவது திருமணம் செய்ததாக சிவப்பிரியா புகார். குமரவேலு கைது. | கொடுமை | |
| 352. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பொன்னகரம் 3வது தெருவைச் சேர்ந்த ஜெயக்குமார் மகள் ஜெனிபர்மேரி(23). போடியகவுண்டன்பட்டியைச் சேர்ந்த குணசீலன்(27). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். திருமணமாகி 4 நாட்கள் ஆன நிலையில் குணசீலன் வாழ மறுத்ததாக ஜெனிபர்மேரி புகார். குணசீலன் கைது . | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 353. | 2.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை புதுமாகாளிப்பட்டியைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் மகள் மகேஸ்வரி(30)யை அதே பகுதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் அப்பாஸ்(31) மானபங்கம் செய்ய முயன்றதாக மகேஸ்வரி புகார். அப்பாஸ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 354. | 2.2.2011 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி சத்தியமூர்த்தி நகரைச் சேர்ந்த சிவக்குமாரின் மனைவி மல்லிகா(30). உங்கள் கணவரை பிடித்துவைத்திருக்கிறோம் உங்களை விசாரிக்க வேண்டும் என திண்டிவனம் காவலர்கள் மல்லிகாவை காவல் நிலையம் அழைத்துச் சென்று நிர்வாணப்படுத்தி சித்திரவதை. விசாரணைக்குப் பின் வழக்கில் கைது செய்யப்பட்டவரின் மனைவி மல்லிகா இல்லை என தெரிந்தது. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 355. | 3.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை பாளையங்கோட்டை தாலுகா, மனகாவலம் பிள்ளை நகர் பகுதியைச் சேர்ந்த சரவணன்(28). கொக்கிரகுளம் தேவி மருத்துவமனையில் தவறான சிகிச்சையால் சரவணன் மரணம். பொதுமக்கள் போராட்டம். | மருத்துவர்கள் அலட்சியம் | S.கணேசன் |
| 356. | 3.2.2011 | **சென்னை மாவட்டம்:** விருகம்பாக்கம் காமராஜர் சாலையில் வசிக்கும் அனந்தாச்சாரி மனைவி சாந்தாமணி(72). தனியாக வீட்டில் இருந்த சாந்தாமணியை மர்ம நபர் | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கத்தியால் கழுத்தை அறுத்து அவர் அணிந்திருந்த நகை கொள்ளை. சிகிச்சை பெற்றுவரும் சாந்தாமணி புகார். | | |
| 357. | 3.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி குருவிக்கரம் காலனியில் வசிக்கும் முனியம்மாள்(40). தனது வீட்டில் ரேசன் அரிசி பதுக்கி வைத்திருப்பதாகப் புகார். அதிகாரிகள் சோதனையில் ஆந்திராவுக்குக் கடத்த இருந்த 1,600 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 358. | 3.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் ரயில் நிலையத்திற்கு ஆர்.பி.எப் காவலர் ஆரோக்கியசாமி பணிக்கு போதையில் வந்ததோடு பணியில் இருந்த சிக்னல் ஊழியர் மஞ்சுளாவிடம் தகராறு செய்து அடித்ததாக சிகிச்சை பெற்றுவரும் மஞ்சுளா ஆரோக்கியசாமி மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 359. | 3.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சரவணம்பட்டி சிவானந்தபுரத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகள் அரங்கநாயகி (எ) மாலா(14) சவுந்தராஜ் மகள் சாஜிதா(14) பள்ளி சென்ற இருவரையும் காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 360. | 3.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சிங்காநல்லூர் நீலிக்கோணம்பாளையம் விஜயலெட்சுமி நகரைச் சேர்ந்த பழனிச்சாமி மகள் தமிழ்செல்வி(17) பிளஸ் –1 படிக்கும் தமிழ்செல்வியை காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 361. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை யு.சி.மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் டேனியல், ஜெயக்குமார், அருண்பாண்டியன், மூர்த்தி, ஜெயராஜ், ஐந்துபேரும் சரியாக படிக்காததால் பெற்றோர் கண்டித்தனர். மனமுடைந்த மாணவர்கள் ரயில் மூலம் வெளியூர் செல்ல முயற்சி. மதுரை ரயில்வே நிலையத்தில் நின்றிருந்தவர்களை காவலர்கள் மீட்டு பெற்றோரிடம் | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்படைத்தனர். | | |
| 362. | 3.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை பெசன்ட் நகர், ஆல்காட் குப்பம், பஜனை கோவில் தெருவைச் சேர்ந்த கனகலிங்கம் மகள் திவ்யா(21) எம்.ஜி.ஆர்., ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.காம்., கம்ப்யூட்டர் சயின்ஸ் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். உடன் படித்த அனுராதா பணம் காணாமல் போனதால் பேராசிரியர்கள், சுதா(26), விஜயலெட்சுமி(36), செல்வி(31), ஜெயலெட்சுமி ஆகியோர் திவ்யாவை நிர்வாணப்படுத்தி சோதனை செய்ததால் மனமுடைந்த திவ்யா வீட்டில் தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 363. | 3.2.2011 | **சென்னை மாவட்டம்:** தொழிலாளர் நலத்துறை சார்பில் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு இறப்புக்குப் பின் வழங்கப்பட்ட இயற்கை மரண நிதி உதவியில் முறைகேடு நடைபெற்றதாக புகார். | லஞ்சம் | தினமணி |
| 364. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எஸ்.எம்.பி. காலனியில் வசிப்பவர் நல்லம்மாள்(86) மகன் பிரபு. நல்லம்மாளின் மகன் சாப்பாடு போடாமல் அறையில் பூட்டி கொடுமைபடுத்தியதாக நல்லம்மாள் நீதிபதி ரத்னராஜிடம் மனு. | முதியவர்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 365. | 3.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் ஈத்தாமொழி காவல் நிலையத்திற்கு வரும் வாதி, பிரதிவாதிகளை மிரட்டி லஞ்சம் வாங்குவது, அப்பாவிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்வது தகாத வார்த்தைகளால் திட்டுவது என மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஈத்தாமொழி காவலர்களை எதிர்த்து சிபிஎம் சார்பில் தர்ணா போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 366. | 3.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** நரிக்குடி ஒன்றியத்தில் தாமரைக்குளம் கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள் வீடுகளுக்கு பஞ்சாயத்து தலைவியின் கணவர் | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுந்தரின் தூண்டுதலின் பேரில் ஆதிக்கச் சாதியினர் தலித் வீடுகள் மீது தீ வைத்து கொளுத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார். | | |
| 367. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கருப்பாயூரணியைச் சேர்ந்த ஜமால் முகமது மகள் பர்ஜானா பேகம்(18). கல்லூரிக்கு சென்ற பர்ஜானா பேகத்தைக் காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 368. | 3.2.2011 | **மதுரை மாவட்டம்:** பட்டுக்கோட்டையை சேர்ந்த ராமநாதன் மனைவி முனீஸ்வரி(29). கணவர் மற்றும் அவரது உறவினர்கள் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக முனீஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தினகரன் |
| 369. | 3.2.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் ரமேஷ், குமார், இருவரும் பள்ளி நேரத்தில் மது குடிக்க செல்வது வழக்கம். மது அருந்திவிட்டு வந்து மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் அவலநிலை. | வகுப்பறை வன்முறை & ஆசிரியர்கள் மது அருந்திவிட்டு வந்து வகுப்பு நடத்தும் நிலை | தினகரன் |
| 370. | 3.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி, கம்பம், கூடலூர் வழியாக கேரளாவிற்கு கடத்த முயன்ற 100 கிலோ ரேசன் அரிசி பறிமுதல். டிரைவர்கள் லியாகத் அலி, அனீஸ் இருவர் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 371. | 3.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை சருகணிரோட்டில் டாஸ்மாக் கடை சோதனை செய்ய சென்ற எஸ்ஐ மீனாட்சிசுந்தரம், மற்றும் ஏட்டு ராமச்சந்திரனுக்கும் வக்கீல் சந்திரபோசுக்கும் இடையே மோதல். வழக்கறிஞர்களைத் தாக்கிய காவலர்களை பொதுமக்கள் தாக்கியதாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 372. | 4.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி வள்ளுவர் நகரைச் சேர்ந்த கலைச்செல்வி(43) மகள் புஷ்பாவுக்கும்(21) சுரேஷ்(28)க்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இந்நிலையில் புஷ்பாவின் சகோதரன் லோகேஷின் நண்பன் கோபி | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புஷ்பாவை கடத்திச் செல்லும்போது தடுக்க வந்த சுரேஷ் மற்றும் கலைச்செல்வியை கோபி அரிவாளால் வெட்டிவிட்டு புஷ்பாவை கடத்திச் சென்றதாக கலைச்செல்வி கோபி மீது புகார். | | |
| 373. | 4.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை மேலவாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மதிய உணவு திட்டம், அமுல்படுத்ததால், அந்தப் பகுதியில் உள்ள சாய்பாபா கோயிலில் அன்னதானமாக வழங்கப்பட்ட சாப்பாடு வாங்க மாணவர்கள் ஒரு கிலோ மீட்டர் நடந்து செல்லும் அவல நிலை. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 374. | 4.2.2011 | **மதுரை மாவட்டம்:** யா. ஒத்தக்கடை புதுதாமரைப்பட்டியைச் சேர்ந்த பிரபாகரன் மகன் அமர்நாத்தை அதே பகுதியைச் சேர்ந்த கருப்பு, சத்தி டூவிலரில் கடத்த முயற்சி. சுங்கசாவடி அருகே தப்பி வந்த அமர்நாத் குறித்து பிரபாகரன் புகார் கொடுத்தும் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை. புகார் கொடுத்தற்காக ஊராட்சி மன்றத் தலைவர் விஜயகுமார் மிரட்டுவதாக பிரபாகரன் நீதிமன்றத்தில் மனு தாக்கல். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 375. | 4.2.2011 | **செங்கல்பட்டு மாவட்டம்:** மதுராந்தகம் அடுத்த மொரப்பாக்கம் ஊராட்சிக்கு தமிழக அரசு 964 இலவச டிவிக்களை வழங்கியது. ஆனால் அவற்றில் 21 டிவிக்களை ஊராட்சி மன்ற தலைவி மஞ்சுளா சங்கர் தனக்கு சொந்தமான சிமெண்ட் குடோனில் பதுக்கி வைத்ததாக பொதுமக்கள் புகார். | ஊழல் | தினத்தந்தி |
| 376. | 4.2.2011 | **சென்னை மாவட்டம்:** அபிராமபுரம் காவல் நிலையத்தில் ஏட்டாக பணிபுரிபவர் முத்தழகன்(48) தனது வீட்டிற்கு மின் இணைப்பு கேட்டு மின்வாரிய உதவி பொறியாளர் பாஸ்கரன்(50)னை அணுகினார். அவர் ரூ.3,200 லஞ்சம் கேட்டதாக முத்தழகன் புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 377. | 4.2.2011 | **மதுரை மாவட்டம்:** | பெண்கள் மீதான | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதுரை சர்வேயர் காலனியை அடுத்த எஸ்.கொடிக்குளத்தைச் சேர்ந்த குமார் மனைவி மணிமொழி இருவரும் தங்கள் நிலத்தை பார்த்துவிட்டு திரும்பும் வழியில் மற்றொரு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த மர்ம நபர்கள் குமாரை தாக்கிவிட்டு மணிமொழியின் நகைகளை பறித்துச் சென்றதாக புகார். | வன்முறை | |
| 378. | 4.2.2011 | **சேலம் மாவட்டம்:** கோவை மேட்டுப்பாளையம் அருகில் கல்லார் என்ற இடத்தை சேர்ந்த ஷாகிலா ரயில்வேக்கு சொந்தமான இடம் அருகில் உள்ள தனது இடத்தில் வீடு கட்ட தடையில்லா சான்று கேட்டு சேலம் ரெயில்வே கோட்டத்தில் கட்டுமான பிரிவு அலுவலகத்தில் கண்காணிப்பு பொறியாளராக வேலை பார்க்கும் லதா(47)வை அணுகினார். அவர் ரூபாய் 4 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக ஷாகிலா புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 379. | 4.2.2011 | **சென்னை மாவட்டம்:** எண்ணூர் தாழங்குப்பம் பகுதியைச் சேர்ந்த சாதிக் பாட்ஷா(42) மனைவி மெகருன்னிசா(37). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு சாதிக் பாட்ஷா மனைவி மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொழுத்தியதாக சாதிக் பாட்ஷா மீது மெகருன்னிசா புகார். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மெகருன்னிசா மரணம். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 380. | 5.2.2011 | **சென்னை மாவட்டம்:** வண்ணாரபேட்டை காலிங்கராயன் தெருவைச் சேர்ந்த பிரேம்குமார்(40). அதே பகுதியைச் சேர்ந்த செல்வம் இருவருக்கும் பணத்தகராறு காவல் நிலையத்தில் புகார். பிரேம்குமார் பணத்தை திருப்பி செலுத்திய பின் கடன் பத்திரம், ஆவணங்கள் அனைத்தும் செல்வத்திடம் இருந்து வாங்கிய எஸ்.ஐ., ஜெயக்குமார் பத்திரத்தை திருப்பித் தர பிரேம்குமாரிடம் ரூபாய் 1500 லஞ்சம் கேட்டதாக எஸ்.ஐ ஜெயக்குமார் மீது புகார். | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 381. | 5.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் அடுத்த செவ்வாப்பேட்டை காவல் நிலையத்திற்குட்பட்ட சிறுகடல் கிராமத்தைச் சேர்ந்த அமுல்ராஜ்(38) மனைவி ஷகீலா(28). மனைவி மீது சந்தேகம் கொண்ட கணவர் மற்றும் குடும்பத்தார் ஷகிலாவை தனியறையில் அடைத்து சித்திரவதை செய்ததாக கணவன் மீது ஷகீலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 382. | 5.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை சுரண்டை அருகே இடையர்தவணையைச் சேர்ந்த மாடசாமி மகள் செல்வி(20) அகரக்கட்டையைச் சேர்ந்த பாஸ்டின்(23). இருவரும் காதலித்தனர். பாஸ்டின் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக பாஸ்டின் மீது செல்வி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 383. | 5.2.2011 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி ஒன்றியம் தருமத்துப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 272 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். தலைமை ஆசிரியர் உட்பட 8 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். குடிநீர், சத்துணவுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை எனவும் கணினி இருந்தும் ஆசிரியர்கள் இல்லாததால் தங்கள் படிப்பு பாதிக்கப்படுவதாகவும் மாணவ, மாணவிகள் புகார். | வகுப்பறை வன்முறை | ஜனசக்தி |
| 384. | 5.2.2011 | **அரியலூர் மாவட்டம்:** ஜெயங்கொண்டம் அடுத்த உடையார்பாளையத்தைச் சேர்ந்த 6ம் வகுப்பு மாணவி(11)யை, அதே பள்ளியின் ஆசிரியர் மோகன்தாஸ்(38) சில்மிஷம் செய்ததாக ஆசிரியர் மீது மாணவி புகார். | வகுப்பறை வன்முறை | தமிழ்முரசு |
| 385. | 6.2.2011 | **சென்னை மாவட்டம்:** நெல்லிக்குப்பம், கைலாசநாதர் கோவில் பகுதியில் உள்ள சுயஉதவிக் குழுவினரிடம் பாதுகாப்பு இயக்கம் மூலம் கடனுதவியும், நலத்திட்ட உதவிகளும் வழங்க ஒவ்வொரு குழுவும் 5,000 ருபாய் கட்டினால் | ---- | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தனிநபருக்கு 25 ஆயிரம் கடன் தருவதாக ஏமாற்ற முயன்ற மூன்று பெண்களை கிராம மக்கள் முற்றுகையிட்டனர். | | |
| 386. | 6.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, கீழ்ப்பாக்கம், கெல்லிஸ் ஏ.கே.சாமி ஆறாவது தெருவைச் சேர்ந்த காஜா மகன் முகமதுஹசன்(21) ஹசனை கடத்தி 1.5 கோடி ரூபாய் கேட்டு மிரட்டிய ராமநாதபுரத்தைச் சேர்ந்த வாஞ்சிநாதன்(29) ராஜவிக்னேஷ், ராஜ்குமார்(34), முத்துக்கருப்பு(21), விக்னேஷ், முத்துக்குமார்(27) ஆகிய 6 பேர் கைது. | கடத்தல் | தினமலர் |
| 387. | 6.2.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுச்சேரி காலாப்பட்டு மத்திய சிறையில் ஆயுள் கைதி அப்பாராசு இறந்ததையடுத்து சிறையில் கைதிகள் காலவரையற்ற உண்ணாவிரதம். கைதிகள் சிறையில் உணவு தயாரிக்க மறுப்பு. | சிறைச்சாலை வன்முறை | தினமலர் |
| 388. | 6.2.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி திரு.வி.க., நகர் பழை இரும்பு வியாபாரி பிரதீப்(35) அவரது தோழி ஜாக்குலின்(25). இருவரையும் கடத்திச் சென்றனர். பயைழ இரும்பு வியாபாரத்தில் பிரதீப் 3 லட்சம் ருபாய் பாக்கி தராததால் வியாபாரிகள் தண்டபாணி(35) ராதாகிருஷ்ணன்(22) இருவரும் பிரதீப், அவரது தோழி ஜாக்குலின்(25)னை கடத்தியதாக இருவரும் கைது. | கடத்தல் | தினமலர் |
| 389. | 6.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை திருப்புவனம் அருகே செல்லப்பனேந்தல் ஆற்றில், மதுரை காவலர்கள் மணல் திருடுவதாக புகார். | மணல் கொள்ளை | தினத்தந்தி |
| 390. | 6.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேசுவரம் அருகே உள்ள தெற்குவாடி பகுதியைச் சேர்ந்த நாட்டு படகு மீனவர்கள் நடுக்கடலில் மீன்படித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் அனைத்து | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படகுகளையும் விரட்டியடித்ததோடு மீனவர்களை தாக்கி வலைகளை அறுத்ததாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | | |
| 391. | 6.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சம்பக்குளம் பகுதியைச் சேர்ந்த சிதம்பரம் மனைவி நாச்சம்மை. கணவர் மற்றும் அவரது உறவினர்கள் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக நாச்சம்மை புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 392. | 6.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே குருவித்துறை வைகையாற்றில் மணல் திருட்டில் ஈடுபட்ட லாரியை தடுத்து நிறுத்த முயன்ற எஸ்.ஐ கோதண்டராமன் மீது லாரியை ஏற்றிக் கொல்ல முயன்ற எழுவம்பட்டியைச் சேர்ந்த ராஜாவை(33) கைது செய்தனர். | மணல் கொள்ளை | தினகரன் |
| 393. | 7.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிம்மக்கல் வடக்கு லைன் 3 வது சந்து பகுதியைச் சேர்ந்த சாகுல்ஹமீது மனைவி ஷாகிராபானு(26). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவியை துன்புறுத்தினார் சாகுல்ஹமீது. காவல் நிலையத்தில் ஷாகிராபானு புகார் கொடுத்ததால் ஷாகிராபானு மற்றும் அவரது சகோதரிகள் கவுசிக பானு, ஆசாத்பானு இருவரையும் சாகுல்ஹமீது தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 394. | 7.2.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகேயுள்ள சுக்காம்பட்டியைச் சேர்ந்த சீராளன் மனைவி தேவசேனா(41). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக தேவசேனா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 395. | 7.2.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு விஷாரம் புதுப்பேட்டை 3 வது தெருவைச் சேர்ந்த இப்ராகிம்(26) மனைவி ஷாமா(25) குழந்தைகள் ரகீம்(4) அர்ஷா(11/2). இப்ராகிம் சரியாக வேலைக்கு போகாததால் போதிய வருமானமின்றி தனது இரு குழந்தைகளையும் ஏரியில் வீசி | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொலை செய்ய முயன்றபோது குழந்தைகள் பொதுமக்களால் மீட்கப்பட்டனர். | | |
| 396. | 7.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை ஆதனூர்ரோடு பகுதியில் வசிப்பவர் ராஜகருப்பு(3) மனைவி அமிர்தவள்ளி(22). ராஜகருப்பு குடித்துவிட்டு மனைவியை துன்புறுத்தியதால் மனமுடைந்த அமிர்தவள்ளி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 397. | 7.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை வேம்பத்தூர் கற்பக விநாயகர்புரத்தைச் சேர்ந்த வசந்தா(18) வசந்தாவிற்கு தாய் தந்தை இல்லாததால் திருமணம் செய்ய வந்த மாப்பிள்ளை வீட்டார் வசந்தாவை நிராகரித்தனர். மனமுடைந்த வசந்தா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 398. | 7.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** திருவாடானை சரகம் மங்களக்குடி அருகே உள்ள பெருவாக்கோட்டைச் சேர்ந்த முருகேசன் மனைவி வசந்தி. தனியாக வீட்டில் இருந்த வசந்தி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 399. | 7.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை பொள்ளாச்சி தாலுகா அம்பராம்பாளையத்தில் டாக்டர் ஆல்வா பாராமெடிக்கல் கல்வி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிட மாணவர்களுக்கு விஷூவல் மீடியா பயிற்சி அளிக்க அனுமதி பெற்றது. பயிற்சியாளர்களை தாட்கோ அலுவலர்களும் ஃபனா நிறுவனத்தினரும் சேர்ந்து பயிற்சிக்கான உபகரணங்கள் வழங்குதல், பயிற்சிக் காலம் முடிந்தபின் பயிற்சிக்குரிய தொகை வழங்கப்படும் என 12 நிபந்தனைகள் விதித்தன ஆனால் எந்த நிபந்தனையும் பின்பற்றப்படவில்லை. இப்பயிற்சியினை நடத்தும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட படிப்பை படிக்காதவர்கள் என இதுபோல் பல்வேறு பாடப்பிரிவுகளை | ஊழல் | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடத்தியதில் சுமார் இரண்டுகோடி ஊழல் நடந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார். | | |
| 400. | 7.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு அந்தியூர் அருகே மைக்கேல் பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கூடுமையனூர் தலித் காலனியின் 200க்கும் மேற்பட்ட வீடுகளில் 500 பேர் வசிக்கின்றனர். இவர்கள் வழிபடும் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த குருசாமி ஆக்கிரமிப்பு செய்ததைத் தட்டிக்கேட்ட தலித் மக்களை குருசாமி அடியாட்களுடன் வந்து தாக்கியதோடு. பெண்களின் ஆடைகளை இழுத்து பானமங்கம் செய்ததாகவும், குழந்தைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் குருசாமி மீது தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |
| 401. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருவாதவூரில் மாணிக்க வாசகர் தெருவில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி அருகே அரசு மதுக்கடை செயல்படுகிறது. காலையில் பள்ளி செல்லும் மாணவிகளை குடிமகன்கள் போதையில் கேலி செய்வதால், மாணவிகள் அவதிக்குள்ளாகின்றனர். மதுக்கடையை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி திருவாதவூரை சேர்ந்த ராஜசேகரன் நீதிமன்றத்தில் மனு. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 402. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வைகையாற்றில் மணல் திருட்டு சம்பவங்கள் நடப்பதை, கட்டுப்படுத்த அதிகாரிகள் முன்வராததால், சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடிநீர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் புகார். | மணல் கொள்ளை | தினமலர் |
| 403. | 8.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை சிட்லபாக்கம், எம்.எம்.டி.ஏ., நகர், சேகர் அவென்யூவைச் சேர்ந்த ரமேஷ் மனைவி கலாவதி(39) சுங்கத்துறையில் பணியாற்றி வந்தார். தியேட்டரில் படம் பார்க்கும்போது மர்ம நபர்கள் கலாவதியை அரிவாளால் வெட்டினர். வெட்டிய | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நபர்களை கைது செய்யக்கோரி கலாவதி போலீஸ்கமிஷனரிடம் புகார். | | |
| 404. | 8.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் திருவாடானை ஏ. மணக்குடி பகுதி விவசாயிகள் 200 பேருக்கு அரசு, ஒரு ஏக்கர் நிலம் வழங்கியது. அதிகாரிகள், அதற்கான பாட்டாவையும் பயனாளிகளிடம் வழங்கினர். ஆனால் சம்பந்தப்பட்ட நிலத்தை அளந்து விவசாயிகளுக்கு பிரித்துத் தரவில்லை. இது குறித்து அதிகாரிகளிடம் முறையிட்டும் பயனில்லை என விவசாயிகள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 405. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே கட்டயம்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மகள் சுகன்யா(14). அதே பகுதியைச் சேர்ந்த கண்ணன்(25) சுகன்யாவை பாலியல் பலாத்காரம் செய்ததாக புகார். கண்ணன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 406. | 8.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி ஆயுதப்படை காவலர் ஜெயசீலன் பேருந்து நிறுத்தம் அருகே போதையில் பொதுமக்களிடம் தகராறு செய்ததாக புகார். ஜெயசீலன் சஸ்பெண்ட். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 407. | 8.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் சட்டஒழுங்கு, மகளிர் காவல்நிலையத்தில் பாதுகாப்பாக பாதுகாக்கப்பட வேண்டிய எப்ஐஆர் நகல்கள், காவலர்களின் மெத்தனத்தால் திண்டுக்கல் எஸ்பி அலுவலக மொட்டைமாடியில் தூக்கி வீசப்பட்டுள்ளன. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 408. | 8.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சாப்டூர் அருகே பொட்டல்பட்டியைச் சேர்ந்த சென்றாயபெருமாள் மனைவி ஆதிலெட்சுமி(27). கணவர் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த ஆதிலெட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 409. | 8.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கிணத்துக்கடவு நெகமம் பகுதியைச் சேர்ந்த லீலா(22)வை அதே பகுதியைச் சேர்ந்த நடராஜ் | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் முயற்சி | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடத்த முயன்றதாக லீலாவின் தந்தை புகார். நடராஜ் கைது. | | |
| 410. | 8.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வந்தவாசியை அடுத்த ஆலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த எட்டு வயது சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த ரமேஷ்(28) பாலியல் பலாத்காரம் செய்ததாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுமியின் பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 411. | 8.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ள படிக்காசு வைத்தான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த குருவையா மகள் குருவத்தாய்(23). அதே பகுதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் காளிமுத்து குருவத்தாயை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல் பலாத்காரம் செய்ததாக குருவத்தாய் புகார். காளிமுத்து கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 412. | 8.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தாலுகா பில்லூரைச் சேர்ந்த பாண்டி(26) மனைவி லலிதா(24). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதாக லலிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தமிழ்சுடர் |
| 413. | 8.2.2011 | **கரூர் மாவட்டம்:** கரூர் பேருந்து நிலையம் பகுதியை சுத்தம் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 25 துப்புரவுப் பணியாளர்கள் பணி செய்தனர். நிர்வாகம் 10 தொழிலாளர்களை வேலையில் இருந்து நிறுத்தியதை, கேட்டதற்காக மற்ற 15 தொழிலாளர்களுக்கும் வேலை மறுக்கப்பட்டதாகவும், கரூர் நகராட்சி ஆணையரின் விரோதப்போக்கைக் கண்டித்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம். | தலித் தொழிலாளர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 414. | 9.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த கௌதம் மனைவி மகா(23). கணவன் மனைவி தகராறில் மகா வண்ணாரப்பேட்டை போஜராஜன் நகரில் உள்ள அக்கா தேவி வீட்டில் தங்கியிருந்தார். பக்கத்து வீட்டில் வசிக்கும் காஜாமைதீன் மகாவை | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்ததோடு மகாவை குடிசைக்குள் வைத்து தீ வைத்ததாக காஜாமைதீன் மீது புகார். காஜாமைதீன் கைது. | | |
| 415. | 9.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** போரூர் அடுத்த காரம்பாக்கத்தில் உள்ள போரர் கார்டன் முதல் பிரிவில் வசிப்பவர் கனகா. வீட்டில் தனியாக இருந்த கனகாவை மர்ம நபர் சத்தியலால் தாக்கி அவரிடம் 6 பவுன் நகையை பறித்துச் சென்றதாக சிகிச்சை பெற்றவரும் கனகா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 416. | 9.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஆரணி அருகே சின்னம்முடி ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளி 1 முதல் 5ம் வகுப்பு வரை 72 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இப்பள்ளியில் ஒரு ஆசிரியர் மட்டுமே உள்ளதால் இவர்களின் படிப்பு பாதிக்கப்படுவதாக மாணவர்கள் புகார். கூடுதலாக ஆசிரியர்கள் நியமிக்க வேண்டும். மற்றும் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பள்ளி இடத்தை அளக்க வேண்டும். பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி பலமுறை மனு கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 417. | 9.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** கூடுவாஞ்சேரி நந்திவரம் பகுதியைச் சேர்ந்த நீலகண்டன் மனைவி வேளாங்கண்ணி(26) இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ள நிலையில் கணவன் மனைவிக் குடும்பத் தகராறில் கணவர் கோபித்துக் கொண்டு போனதால் மனமுடைந்த வேளாங்கண்ணி தீக்குளித்துத் தற்கொலை முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி | தினகரன் |
| 418. | 9.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கவுண்டம் பாளையம் ஜடிஜ நகர் பகுதியைச் சேர்ந்த அன்புராஜ் மகள் கிரிட்டில்டா(23). அன்புராஜின் தங்கை மகன் அருள்தாஸ்(28). இருவரும் காதலித்தனர். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருள்தாஸின் பெற்றோர் திருமணத்திற்கு மறுத்ததால் மனமுடைந்த கிரிட்டில்டா சாணி பவுடரை குடித்துத் தற்கொலை. | | |
| 419. | 9.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை போத்தனூர் கே.பி.கே. நகரைச் சேர்ந்த சிவசக்தி மனைவி ராஜேஸ்வரி(22) இத்தம்பதியினருக்கு 10 மாதக் குழந்தை உள்ளது. ராஜேஸ்வரி ஆசிரியை பயிற்சி படித்தார். தேர்வில் ஆங்கிலப்பாடத்தில் தோல்வி அடைந்ததால் மனமுடைந்த ராஜேஸ்வரி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 420. | 9.2.2011 | **நீலகிரி மாவட்டம்:** நீலகிரி கூடலூர் அருகே கேரளா செல்லும் சாலையில் நாடுகாணி கிராமம் அருகே அதிகாரிகள் நடத்திய வாகனசோதனையில் லாரியில் கேரளாவிற்கு கடத்த இருந்த 50 மூடைகளில் 2.5 டன் ரேசன்அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கொள்ளை | தினகரன் |
| 421. | 9.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தாலுகா பில்லூரைச் சேர்ந்த பாண்டி(26) மனைவி லலிதா(24). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதாக லலிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 422. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிறுத்தத்தில் 13 வயது சிறுமி நின்றிருந்தார். சந்தேகமடைந்த காவலர்கள் விசாரித்தபோது விருதுநகரில் இருந்து வருவதாக கூறினார். சிறுமியை பெற்றோரிடம் காவலர்கள் ஒப்படைத்தனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 423. | 9.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் பாம்பன் ஊராட்சியில் உள்ள முந்தல்முனை கிராமத்தில் 110 குடும்பங்கள் வசிக்கின்றனர். 1993ல் இருந்து மின்வசதி கேட்டு முறையிட தொடங்கிய இவர்களுக்கு 27 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவில்லை என இக்கிராம மக்கள் புகார். | அடிப்படை வசதியின்மை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 424. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சயமநல்லூரைச் அடுத்த தோடநேரியைச் சேர்ந்த சிவக்குமார் மீது நாகமைலைபுதுக்கோட்டை காவல் நிலையத்தில் ஒரு கிரிமினல் வழக்கு நிலுவையில் உள்ளது. சிவகுமார் வழக்கு தொடர்பாக சப்–இன்ஸ்பெக்டர் சாந்தகுமாரை அணுகினார். வழக்கின் குற்றப்பத்திரிகை நகலில் இருந்து பெயரை நீக்கம் செய்வதற்காக சாந்தகுமார் ரூ. 7 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக சிவக்குமார் புகார். லஞ்சம் வாங்கிய சப்–இன்ஸ்பெக்டர் சாந்தகுமார் கைது. | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 425. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் அதிகாலை வீட்டிற்கு முன்பு கோலமிடும் மற்றும் கடைக்குச் செல்லும் பெண்களிடம் நகைகளை பறித்துச் சென்ற திருச்சியைச் சேர்ந்த நகைபட்டறை அதிபர்மகாலிங்கம்(39), கார்த்திக்(21) பாண்டியராஜன்(27), முருகேசன்(37) சிக்கந்தனர்(28) ஆகிய 5 பேரை காவலர்கள் கைது செய்தனர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 426. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூரை அடுத்த கீழவளவைச் சேர்ந்த குண்டுமலை மகன் வாலமலை(29). ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தது தொடர்பான வழக்கில் நீண்ட நாட்களாக விசாரணைக்கு ஆஜராகாமல் வாலமலை தலைமறைவாக இருந்தார். அவரை கைது செய்ய நீதிபதிகள் உத்தரவு. வாலமலையை கைது செய்து காவலர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 427. | 9.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை மாவட்டம் தென்காசியில் உள்ள இந்தியன் வங்கியின் சார்பில் 2007–ம் ஆண்டு தனியார் நிறுவனங்களுக்கு விதிகளை மீறி முறைகேடாக கடன் வழங்கிய வங்கி அதிகாரி ஈஸ்வரன் கைது. | ஊழல் | தினத்தந்தி |
| 428. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை, உசிலம்பட்டி மாருதி நகரைச் | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த தீபா. அய்யங்கோவில்பட்டியைச் சேர்ந்த லெனின்(29) தீபாவின் வீட்டிற்குள் நுழைந்து சில்மிஷம் செய்ய முயன்றதாக லெனின் மீது தீபா புகார். லெனின் கைது. | | |
| 429. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் ஹார்விபட்டியைச் சேர்ந்த கந்தசாமி என்ற சேகர்(42 மனைவி சுமித்ரா. திருப்பரங்குன்றம் பூங்காபகுதியில் இரும்பு, சிமென்ட் கடை நடத்தி வந்தார். ஹார்விபட்டி அதிமுக கவுன்சிலர் பாண்டுரெங்கன், திமுக கவுன்சிலர் தங்கம்பவுன்ராஜ், மற்றும் திமுக பிரமுகர் உசிலை சிவா ஆகியோரிடம் கடன் பெற்றிருந்தார். 3 பேரும் கந்துவட்டி கேட்டு மிரட்டியதால் மனமுடைந்த கந்தசாமி விஷம் குடித்துத் தற்கொலை. தனது கணவரின் தற்கொலைக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி சுமித்ரா புகார். | கந்துவட்டிக் கொடுமை | தினகரன் |
| 430. | 9.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சிவானந்தா காலனியைச் சேர்ந்த அருண் தினேஷ்(25) மனைவி மலர்க்கொடி(23). மலர்கொடிக்கு தன்ராஜ் என்பவருடன் கள்ளக்காதல். தன்ராஜுக்கும் மலர்கொடிக்கும் எற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த தன்ராஜ் மலர்கொடியை கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 431. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை டி.ஆர்.ஓ. காலனியில் உள்ள மேரிஆன் மெட்ரிக் பள்ளியில் நீதிபதி கோவிந்தராஜன் கமிட்டி அறிவித்த பள்ளிக் கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக பெற்றோர் புகார். கூடுதல் கட்டணம் செலுத்தாத மாணவ, மாணவியரை வகுப்பறையில் அனுமதிக்காத மெட்ரிக் பள்ளியை கண்டித்து பெற்றோர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 432. | 9.2.2011 | **மதுரை மாவட்டம்:** தமிழகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் தலித் மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகம் வழங்குவதில் பல | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாவட்டங்களில் ஊழல் நடைபெற்றுள்ளதாக புகார். இப்புகார்கள் குறித்து விசாரித்து 30 நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என ஆதிதிராவிட நலத்துறை ஆணையருக்கு தாழ்த்தப்பட்ட ஆணையத்தின் இயக்குநர் இ. தசரதன் உத்தரவு. | | |
| 433. | 9.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நகர்கோவில் ஆட்சியர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவலர்கள் நடத்திய சோதனையில் 18 விடுதிகளுக்கும் சேர்த்து வசூலிக்கப்பட்ட பணம் மற்றும் கூடுதலாக வசூலிக்கப்பட்ட பணத்தையும் மாவட்ட அலுவலகத்தில் செலுத்துவதற்காக நின்றிருந்த ஆரல்வாய் மொழி விடுதி காப்பாளர் கணபதியிடமிருந்து (ரூ 11 ஆயிரத்து 25ஐ)யும், மற்றும் பிற்படுத்தப்பட்டோர் அலுவலக கணக்கு அதிகாரி கணேச ராமசந்திரனிடம் இருந்து கணக்கில் காட்டப்படாத மற்றும் சரியான விளக்கம்அளிக்கப்படாத ரூ. 4720–யும் லஞ்ச ஒழிப்பு காவலர்கள் பறிமுதல் செய்தனர். | லஞ்சம் | ஜனசக்தி |
| 434. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் அருகேயுள்ள பாடி பாக்கியத்தம்மன் நகரைச் சேர்ந்த கல்பனா(25). கடலூர் தொண்டமானுத்தம் கிராமம் வன்னியர் தெருவைச் சேர்ந்த சண்முகம்(28) இருவரும் காதலித்தனர். திருமணம் செய்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல். கல்பனா கர்ப்பம். சண்முகம் மீது கல்பனா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 435. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** திருவல்லிக்கேணி ஜாம்பஜார் பக்கிரி சாகிப் தெருவைச் சேர்ந்த பாண்டுரங்கன்(43) திருட்டு வழக்கில் ஜாம்பஜார் காவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் பாண்டுரங்கன் தூக்குப்போட்டுத் தற்கொலை. | சிறைக்கைதி மரணம் | தினகரன் |
| 436. | 10.2.2011 | **சென்னை** | வகுப்பறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **மாவட்டம்:** திருவெற்றியூர் அருகில் கவிபாரதி வித்யாலயா பள்ளியில்அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதலாக கட்டணம் வசூலிப்பதாக புகார். 200க்கும் மேற்பட்ட மாணவர்களின் பெற்றோர் திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் தர்ணா போராட்டம். | வன்முறை | |
| 437. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை ராயபுரம் தொப்பை முதலியார் தெருவைச் சேர்ந்த பிரபாகரன் மகன் அனுஷ்குமார் மற்றும் அவரது நணபர்கள் முகமது, சுகன், மூவரும் டியூசன் சென்றவர்களைக் காணவில்லை என பெற்றோர் புகார். ராயபுரத்தில் மாயமான 3 மாணவர்களைக் காவலர்கள் கோயம்போடு பேருந்து நிறுத்தத்தில் கண்டுபிடித்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 438. | 10.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை ரோடு வீரப்பம்பாளையம் பகுதியைச் சேர்ந்த புவனேஸ்வரி(16) தனியார் பள்ளியில் பிளஸ் –1 படித்து வந்தார். வீட்டில் இருந்து வெளியே சென்ற புவனேஸ்வரியை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 439. | 10.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு விக்னேஸ் நகரைச் சேர்ந்த பானுமதி. தனது சகோதரி வீட்டிற்குச் செல்வதாக சென்ற பானுமதியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 440. | 10.2.2011 | **நீலகிரி மாவட்டம்:** கூடலூரை அடுத்த ஸ்ரீமதுரை கிராமம் போஸ்பாராவைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் ஜிஸ்யா(16) அங்குள்ள அரசு மேல் நிலைப் பள்ளியில் பிளஸ்–2 படித்து வந்தார். மாணவி நோட்டு கொண்டு வரவில்லை என ஆசிரியர் கண்டித்ததால் மனமுடைந்த மாணவி விஷம் குடித்துத் தற்கொலை. | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 441. | 10.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு அருகே 46 புதூர் ஆணைக்கல்பாளையம் பகுதியைச் | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த ரங்கசாமி(34). செட்டிபாளையத்தில் ஒரு கம்பெனியில் கூலி வேலை செய்தார். கம்பெனியின் முதலாளி பணம் காணாமல் போனதாக ரங்கசாமி மீது பொய் புகார். காவலர்கள் தாக்கியதாக ரங்கசாமி புகார். | | |
| 442. | 10.2.2011 | **இராமேஷ்வரம் மாவட்டம்:** எமனேஸ்வரம் பகுதியில் ஒரு சமுகத்தைச் சேர்ந்தவரை மற்றொரு சமுகத்தைச் சேர்ந்தவர் சாதியைச் கூறி திட்டியதாக எழுந்த புகாரில் ஒருவர் கைது செய்யப்பட்டார். ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பரமக்குடி காரைக்குடி நெடுஞ்சாலையில் சாலை மறியல் ஈடுபட்டவர்கள் 30 பேர் மீது வழக்குப் பதிவு. போலீஸ் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 443. | 10.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வாடிப்பட்டி மேடைபுதூரைச் சேர்ந்த உத்தராஜ் மனைவி நதியா(26). நதியா இரண்டாவது மனைவி. முதல் மனைவியின் குழந்தையை நதியா சரியாக பராமரிக்காததால் ஆத்திரமடைந்த உத்தராஜ் அரிவாள்மனையால் வெட்டியதாக நதியா புகார். உத்தராஜ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 444. | 10.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் அரசு அனுமதியின்றி மணல் அள்ளப்படுவதாக புகார். அதிகாரிகள் சோதனையில் வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் அள்ளிக் கொண்டிருந்த லாரி மற்றும் வேன்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 445. | 10.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் புவியியல் மற்றும் சுங்கத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில், லஞ்ச ஒழிப்பு காவலர்கள் நடத்திய சோதனையில் கணக்கில் காட்டப்படாத, ரூ. 29 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். துறை வாரியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்தனர். | | |
| 446. | 10.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கோவையில் இருந்து வந்த பாசஞ்சர்ரெயிலை நாகர்கோவில் ரெயில் நிலைய வார்டில் நிறுத்தி இருந்தனர். அந்த ரெயிலை சுத்தம்செய்யும் பணி நடைபெற்றபோது ஒரு பெட்டியின் கழிவறையில் 35 வயது பெண் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 447. | 10.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை புளியந்தோப்பில் உள்ள மாநகராட்சி பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவி தேன்மொழி ஆசிரியர்கள் திட்டியதால் தற்கொலை. | வகுப்பறை வன்முறை | மாலைமலர் |
| 448. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி அருகே சாலைக்கிராமம் பேருந்து நிலையத்தில் தார்சாலை அமைக்க டெண்டர் விடப்பட்டும் பணி துவங்குவதில் மாதக்கணக்கில் தாமதம். மண்சாலை புழுதியில் இருந்து தப்பிக்க பொதுமக்கள் மாஸ்க்(முகமூடி) அணியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது பொதுமக்கள் புகார். | சுகாதாரக்கேடு | தினகரன் |
| 449. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருவாடானை தாலுகா வெள்ளையபுரம் வடக்கு தெருவைச் சேர்ந்த முகமது இஸ்மாயில் மனைவி தவ்லத் நிஷா(33). தவ்லத் நிஷாவுக்கும அவரது அண்ணன் மனைவி சபுர்நிஷாவுக்கும் இடையே சொத்து தகராறு. சபுர்நிஷா தரக்குறைவாக பேசியதாக தவ்லத் நிஷா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 450. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி அருகே சாலைக்கிராமத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு ஆரம்பகோட்டை, முதுதுராமலிங்கபுரம், சாத்தனூர் பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் இலவச பாஸ் வழங்கப்பட்டுள்ளது. மதுரை வழித்தடத்தல் செல்லும் அரசு பேருந்துகளில் பயணிக்கும் மாணவ, | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாணவிகள் பஸ்பாசை காண்பித்த பின்பும் இது போலி பாஸ் என மாணவர்களை டிக்கெட் எடுக்குமாறு கண்டக்டர் கூறியதாகவும் மறுத்த மாணவர்களை நடுவழியில் இறக்கிவிட்டு சென்றதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் புகார். | | |
| 451. | 10.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி நகரில் சாலையோர கடைகளில் சுகாதார மற்ற முறையில் கலப்பட உணவு பொருட்கள் விற்கப்படுகிறது. இறந்த காலாவதியான மாட்டிறைச்சியை உண்பதால் தொற்று நோய் பரவுவதுடன் உயிர்ப்பலி எற்படும் அபாயமும் நிலவுவதாக புகார். | கலப்பட உணவு | தினகரன் |
| 452. | 11.2.2011 | **கோவை, மாவட்டம்:** கோவை, காளப்பட்டி கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள். டீ கடையில் தலித் மக்களுக்கு என தனி டம்ளர் முறை கடைப்பிடிப்பதோடு, மாரியம்மன் கோவிலில் சாமி கும்பிட தலித் மக்களுக்கு அனுமதி மறுப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கள் |
| 453. | 11.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை திருவிக நகர், டிடி தோட்டம், 3 வது தெருவில் வசிப்பவர் மஞ்சுளா(33) மகன் மோகன்(10). மோகனுக்கு விரைவீக்கம் ஏற்பட்டு பெரம்பூர் பந்தா கார்டன், மெயின் தெருவில் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தனர். மருத்துவரின் தவரான சிகிச்சையால் மோகன் இறந்ததாகவும் அதற்குக் காரணமாக மருத்துவர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மருத்துவமனைவளாகத்தில் உறவினர்கள் போராட்டம். | மருத்துவர்கள் அலட்சியம் | தினகரன் |
| 454. | 11.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அடுத்த காரப்பாக்கம் பாலத்துக்கு கீழ் தண்ணீரில் பாலித்தீன் கவரில் 30 முதல் 35 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலம் கயிற்றால் கட்டப்பட்ட நிலையில் கிடந்தது. இது குறித்து காவலர்கள் விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 455. | 11.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஆவடி காந்திநகர் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராமானுஜம் தெருவைச் சேர்ந்த வர்கீஸ் மனைவி மாரியம்(34) ஐசிஎப் ஊழியர். வேலை முடிந்து வீட்டிற்கு வந்துக் கொண்டிருந்த மரியத்தை வழியில் மர்ம நபர்கள் தாக்கி நகையை பறித்துச் சென்றதாக மரியம் புகார். | | |
| 456. | 11.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** தரமணி பிள்ளையார் கோவில் தெருவில் வசித்த ரீட்டா(20). காய்ச்சலில் பாதிக்கப்பட்ட ரீட்டா மருத்துவர்கள் சீட்டு இல்லாமல் மருந்துக் கடையில் காய்ச்சலுக்கு மாத்திரரை வாங்கி சாப்பிட்டார். கலாவதியான மாத்திரை சாப்பிட்தால் ரீட்டா மரணம். | போலி மருந்துகள் | தினகரன் |
| 457. | 11.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** கல்பாக்கம் இந்திரா காந்தி அணுஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி லோகையன் மனைவி விஜயா(50). உடல் நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த விஜயா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 458. | 11.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** கூடுவாஞ்சேரி அருகேயுள்ள காரணைப்புதுச்சேரி கிராமத்தைச் சேர்ந்த நீலகண்டன் மனைவி வேளாங்கண்ணி(26). கணவன் மனைவி குடும்பத் தகராறு காரமணாக நீலகண்டன் தலைமறைவு. நீலகண்டனின் உறவினர்கள் தகாத வாா்த்தைகயால் திட்டியதால் மனமுடைந்த வேளாங்கண்ணி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 459. | 11.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ரத்தினபுரியைச் சேர்ந்த கமலா(49) மகள் சுதா(14). கமலா கணவனை விட்டு பிரிந்து கட்டிட வேலை செய்து வந்தார். கமலாவுக்கு கட்டிட மேஸ்திரியுடன் தொடர்பு. சுதாவை மேஸ்திரியுடன் உல்லாசமாக இருக்குமாறு தாய் அடித்து துன்புறுத்தியதாக தாய் மீது சுதா கமிஷனரிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 460. | 11.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ராமநாதபுரத்தைச் சேர்ந்த சந்தோஷ்குமார் மனைவி சித்ரா(22). | பெண்கள் மீதான வன்முறை & | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருமணமாகி இரண்டு வருடங்கள் ஆன நிலையில் சித்ரா தீக்குளித்துத் தற்கொலை. | தற்கொலை | |
| 461. | 11.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை வடவள்ளி காமராஜபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணி(28) மனைவி ஜெயலட்சுமி(25). வீட்டில் ஒரு இளம்பெண்ணை தங்க வைத்து விபச்சாரம் நடத்தியதாக இருவரும் கைது. விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்ணுக்கு ஒரு கை ஒடிந்தநிலையில் அந்தப் பெண்ணை மகளிர் விடுதியில் ஒப்படைத்தனர். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 462. | 11.2.2011 | **பொள்ளச்சி மாவட்டம்:** பொள்ளாச்சி அருகே உள்ள எரிசனம்பட்டியைச் சேர்ந்த நடராஜன் மகன் ராஜமாணிக்கம்(28) தனது வீட்டிருகே உள்ள 12 வயது சிறுமியை பானபங்கப்படுத்த முயற்சி. சிறுமியின் அலறல் கேட்டு பொதுமக்கள் சிறுமியை மீட்டனர். ராஜமாணிக்கம் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 463. | 11.2.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் வேம்படித்தாளம் அருகே திருவளிப்பட்டி மேட்டுக்காடு பகுதியைச் சேர்ந்த வள்ளி. வள்ளி வீட்டின் அருகே இருந்த கிணற்றில் விழுந்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 464. | 11.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அலங்காநல்லூர் வெள்ளிமலையான்குன்று பகுதியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி 40ஆண்டுகளாக செயல்படுகிறது. இப்பள்ளியின் சத்துணவுக் மேற்கூறை இடிந்து ஓராண்டாகியும் இன்னும் சீரமைக்கப்படாத நிலையில் உள்ளதாக மாணவர்கள் புகார். | வகுப்பறை வன்முறை | தினமணி |
| 465. | 11.2.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே கிராமத்தில் வயிற்றுப்போக்கு நோய் காரணமாக 20க்கும் மேற்பட்டோர் பாதிப்பு. மூதாட்டி காமாட்சி(60) வயிற்றுப்போக்கு நோயால் இறந்ததாக புகார். | சுகாதாரக்கேடு | தினத்தந்தி |
| 466. | 12.2.2011 | **சென்னை மாவட்டம்:** புளியந்தோப்பு நியூ | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | டேங்க் ரோடில் இரவு வாகன சோதனையில் காவலர்கள் ஈடுபட்டனர். அந்த வழியாக வந்த சரக்கு ஆட்டோவில் 22 மூடைகள் ரேஷன் அரிசி பறிமுதல். ஒட்டேரி குன்னூர் நெடுஞ்சாலையைச் சேர்ந்த சேகர்(40) கைது. | | |
| 467. | 12.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** கொளத்தூர் சாந்திநகர் முதல் தெருவைச் சேர்ந்த பாலமூர்த்தி(52) மனைவி கீதா(43). கணவன் மனைவி குடும்பத் தகராறில் கணவர் தாக்கியதாக கீதா புகார். பாலமூர்த்தி கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 468. | 12.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** பள்ளிப்பட்டு அருகேயுள்ள கொடிவலசா பகுதியைச் சேர்ந்த கோபால்(43) மனைவி கல்யாணி(38). கணவர் மூன்றாவது திருமணம் செய்ததைக் கல்யாணி கண்டித்தார். இந்நிலையில் கல்யாணி மர்மமான முறையில் தூக்குப்போட்டுத் தற்கொலை. கல்யாணியின் தற்கொலையில் மர்மம் இருப்பதாக கல்யாணியின் அண்ணன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 469. | 12.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** மீஞ்சூர் அடுத்த நெய்தவாயல் ஊராட்சி அலுவலகம் அருகில் ரேசன் கடையில் கடந்த 6 மாதங்களாக ரேசன் கடை ஊழியர் அரிபாபு, பாதி ரேசன் கார்டுகளுக்கு பொருட்கள் வழங்கிவிட்டு மீதமுள்ள அரிசி மற்றும் பொருட்களை மளிகை கடைகளுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் பொதுமக்கள் புகார் கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் புகார். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 470. | 12.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கவுண்டம்பாளையம் ஆர்எஸ். நகரைச் சேர்ந்த சாமுவேல்(48) மனைவி ஜான்சி(42) குடிக்க பணம் கேட்டு சாமுவேல் அடித்ததில் காயமடைந்த ஜான்சி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மரணம். சாமுவேல் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 471. | 12.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** | காவல் நிலையச் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொண்டாமுத்தூர் அருகேயுள்ள உலியம்பாளையம் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் கணேஷ்(20). தொண்டாமுத்தூர் சப் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் காவலர் ரஞ்சித் ரோந்து பணியின் போது சாலையின் நடுவே வாகனங்கள் செல்ல இடையூறு ஏற்படுத்தும் வகையில் கற்கள் வைக்கப்பட்டிருந்தன. அதை கணேஷ் வைத்ததாக கருதி காவலர்கள் விசாரணைக்கு அழைத்துச் சென்று தாக்கியதாக புகார். மாணவரை தாக்கிய காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி பொதுமக்கள் சாலை மறியல். | சித்திரவதை | |
| 472. | 12.2.2011 | **சென்னை மாவட்டம்:** கோவை டவுன்ஹால் பகுதியைச் சேர்ந்த கண்ணனின் 20 வயது மகள். அவிநாசி சலையில் தனியார் கல்லூரியில் பிசிஏ முதலாமாண்டு மாணவி. ராமநாதபுரம் சூரியன் வீதியைச் சேர்ந்த பிரகாஷ்(25) இருவரும் காதலித்தனர். பெண்ணின் பெற்றோர் மாணவியை கண்டித்ததோடு அவரது மாமா கீதாமனோகரன் வீட்டிற்கு அனுப்ப முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 473. | 12.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு வள்ளியம்மை நகரைச் சேர்ந்த 23 வயது எம்.எ., பட்டதாரி பெண். ஏற்கனவே முதலில் நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளையை பெண்ணின் பெற்றோருக்கு பிடிக்கவில்லை. வேறு இடத்தில் இரண்டாவதாக நிச்சயம் செய்த மாப்பிளையை பெண்ணிற்கு பிடிக்கவில்லை. திருமணத்திற்கு 5 நாட்களே இருக்கும் நிலையில் முதலில் நிச்சயம் செய்த மாப்பிளையுடன் பெண் மாயம். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 474. | 12.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சுத்திரப்பட்டி அருகேயுள்ள வேலாயுதபுரத்தைச் சேர்ந்த ஜக்கம்மாள் மகள் காளீஸ்வரி. அதே பகுதியைச் சேர்ந்த சிம்பு(23) காளீஸ்வரியை ஒருதலையாக காதலித்தார். காளீஸ்வரி காதலை மறுத்ததால் சிம்பு மற்றும் அவரது | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நண்பர்கள் வீடு புகுந்து ஜக்கம்மாவை தாக்கிவிட்டு காளீஸ்வரியை தூக்கிச் சென்றதாக புகார். | | |
| 475. | 12.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை கீழவந்திபுரம் எம்.ஜி.ஆர் நகரைச் சேர்ந்த மாரியப்பன்(25) அதே பகுதியைச் சேர்ந்த கலா(22) இருவரும் காதலித்தனர். மாரியப்பன் கலாவை திருமணம் செய்ய மறுப்பதாக கலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |
| 476. | 12.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை பிராட்வே அம்பர்சன் தெருவைச் சேர்ந்த அப்துல் பாசித். அப்துல் பாசித் ரகுநாதபிள்ளை என்பவரிடம் வீடு வாங்கினார். கொத்தவால்சாவடியில் இயங்கும் சவுகார்பேட்டை பத்திரப் பதிவாளர் அலுவலகத்தில் பத்தரப்பதிவு செய்யப்பட்டது. சொத்துக்கான ஒரிஜினல் ஆவணங்களை தருமாறு பத்திரப் பதிவாளர் ராதா(57)வை அணுகினார். அவர் ரூபாய் 50,000 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக அப்துல்பாசித் புகார். லஞ்சம் வாங்கும்போது ராதா கைது. | லஞ்சம் | தினமலர் |
| 477. | 12.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஜெய்ஹிந்த்புரம் சுந்தரராஜபுரத்தைச் சேர்ந்த கண்ணதாசன் மனைவி கார்த்தியாயினி(27). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கண்ணதாசன் துன்புறுத்தியதாகவும். திருமணம் நடந்த 4 நாட்களில் கண்ணதாசன் தலைமறைவு. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினத்தந்தி |
| 478. | 12.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் ஸ்டான்சி தெருவைச் சேர்ந்த பாஸ்டர் ஹரிபிரசாத்(32), பாஸ்கரன், டேவிட் தியாகராஜன்(30)னிடம் இருந்து சோழவந்தான் அருகே காவலர்கள் என கூறி 6 பேர் கொண்ட மர்ம கும்பல் ரூ.21/2 லட்சத்தை கொள்ளையடித்ததாக மூவரும் புகார். காவலர்கள் விசாரணையில் சஸ்பெண்ட் ஏட்டு பரதன் உட்பட அனைவரையும் காவலர்கள் தேடிவருகின்றனர். | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 479. | 12.2.2011 | **மதுரை மாவட்டம்:** ஆண்டிப்பட்டி ஏத்தக்கோயில் சாலை பகுதியைச் சேர்ந்த பெரியாண்டி மகள் உமாமகேஸ்வரி(16). ஆண்டிபட்டி அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் பிளஸ்1 படித்து வந்தார். தோழி பேச மறுத்ததால் மனமுடைந்த உமாமகேஸ்வரி விஷம் குடித்துத் தற்காலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 480. | 12.2.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சுழி வட்டம், உளுத்திமடை கிராமத்தில் உள்ள சண்முகநாதன் ரைஸ்மில்லில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 62 மூடை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 481. | 13.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை செங்கோட்டை அருகே புளியறையில் தட்சிணாமூர்த்தி கோயில் அடிவாரத்தில் இருசக்கர வாகனம் நிறுத்தும் கட்டணம் வசூலிப்பவர் வண்ணமுத்து(61) மனைவி சண்முகத்தாய்(58). வீட்டில் தனியாக இருந்த சண்முகத்தாயை கொலை செய்து அவர் அணிந்திருந்த நகையை கொள்ளையடித்துச் சென்றதாக அதே பகுதியைச் சேர்ந்த சங்கரகுமார்(28) கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 482. | 13.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** திருவாடானை அருகே வெள்ளையபுரத்தைச் சேர்ந்த இன்பார்மர் ராவுத்தர் நைனாமுகமது(30) அப்பகுதிகளில் சட்டவிரோதமாக நடக்கும் சம்பவங்களை கலெக்டர், டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ., க்கு தகவல் தெரிவித்ததற்காக ரவுத்தர் நைனாமுகமதுவை அரிவாளால் வெட்டியதாக பறக்கும் படை தாசில்தார் செல்லப்பா உட்பட ஐந்துபேர் கைது. | கொலை முயற்சி | தினமலர் |
| 483. | 13.2.2011 | **கடலூர் மாவட்டம்:** சிதம்பரம் அடுத்த கிள்ளை எம்.ஜி.ஆர்., திட்டு பகுதியைச் சேர்ந்த ராமு மகள் மனோ(15)வை அதே பகுதியைச் சேர்ந்த மணிகண்டன்(38)க்கு கட்டாய | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருமணம் செய்ய ஏற்பாடு செய்ததாக மனோ புகார். | | |
| 484. | 13.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அருகே வீரபாண்டி மாரியம்மன் கோயில்பட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி மேலாதேவி(26). மேகலாதேவிக்கும் அதே பகுதியைச் சேர்ந்த உதயகுமாருக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாக உதயகுமாரியன் தந்தை காவல் நிலையத்தில் புகார். விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு வரும்போது மேகலாதேவி விஷம் குடித்து வந்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 485. | 13.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை தென்காசியை அடுத்துள்ள அழகப்பபுரத்தைச் சேர்ந்த பழனி மகன் சுடலைகுமார்(14) 9ம் வகுப்பு படித்து வந்தார். பள்ளி சென்ற சுடலைகுமாரை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 486. | 13.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் தேவிநகரைச் சேர்ந்த செல்வி(35) மதுரை டி.பி.கே. ரோடு பெருமாள் நந்தவனம் தெருவைச் சேர்ந்த சார்லஸ்(28) இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். 5 மாத கார்ப்பிணியான செல்வியை ஏமாற்றிவிட்டு சார்லஸ் தலைமறைவு. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 487. | 13.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே உள்ள குருவித்துறையைச் சேர்ந்த சதிஷ்குமார்(31) மனைவி பிரபாவதி என்ற பிரபா(25). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்தியதால் பிரபா தூக்குப்போட்டுத் தற்கொலை. சதீஷ்குமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினத்தந்தி |
| 488. | 13.2.2011 | **தஞ்சை மாவட்டம்:** கும்பகோணம் அருகே மேலத்துக்குறிச்சி கீழத்தெருவைச் சேர்ந்த குமார் மகள் சூர்யா(13). நீலத்தூர் அரசு உயர் நிலைப் பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் சூர்யாவை வகுப்பாசிரியர் பணத்தை திருடியதாக கூறி மற்ற மாணவிகள் முன்னிலையில் திட்டியதால் | வகுப்பறை வன்முறை & தற்கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனமுடைந்த சூர்யா தீக்குளித்துத் தற்கொலை. | | |
| 489. | 13.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த பம்மல் இந்திராகாந்தி தெருவைச் சேர்ந்த மூர்த்தி மகன் பரசுராமன்(23). சித்தாலபாக்கத்தைச் சேர்ந்த லோகநாதன் மகள் கவிதா(20). இருவரும் பெற்றோர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்தனர். புதுமண தம்பதிகள் இருவரும் தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 490. | 13.2.2011 | **மதுரை மாவட்டம்:** புதுக்கோட்டை சக்திவேல்புரத்தைச் சேர்ந்த தேவதாஸ் மகள் மகேஸ்வரி(21). இவர் சின்ன சொக்கிகுளத்தில் விடுதியில் தங்கி காமராஜர் பல்கலைக்கழக கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். கல்லூரி சென்றவரை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 491. | 13.2.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லையில் காவலர்கள் நடத்திய அதிரடி சோதனையில் 23 மாட்டு வண்டிகள் மற்றும் 3 வாகனங்களை பறிமுதல் செய்தனர். 50 பேர் கைது. | மணல் கொள்ளை | ஜனசக்தி |
| 492. | 13.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அமெரிக்கன் சர்ச் ரோட்டைச் சேர்ந்த மீரான் மகன் அஜார் அகமது(21). சப்பாணிகோயில் தெருவைச் சேர்ந்த ஒரு பெண்ணை காதலித்தார். தான் காதலித்த பெண்ணின் தாய் ரபிகா மற்றும் அவருடன் இரண்டுபேர் தன்னை கத்தியால் குத்த வந்ததாக அஜார் அகமது புகார். தனது சட்டையை கிழித்து தவறாக நடக்க முயன்றதாக ராபிகா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 493. | 13.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** குஜிலியம்பாறை அருகேயுள்ள கூட்டக்காரன்பட்டியில் காமாநாயக்கர் மகன்கள் முத்துச்சாமி, சுப்பிரமணி, பாண்டியன் ஆகிய 3 பேருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த ரஞ்சிதா, தேவிலெட்சமி, நீலாமணி ஆகியயோரை திருமணம் செய்துவைத்தனர். இந்த 3 பேரும் சிறுமிகள் என்ற தகவல். தாசில்தார் | குழந்தைகள் மீதான வன்முறை & குழந்தைத் திருமணம் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணை. | | |
| 494. | 13.2.2011 | **மதுரை மாவட்டம்:** சிவகாசி மேலூர் அருகே கருத்தபுளியன்பட்டியைச் சேர்ந்த ராஜா(30) மனைவி ஸ்ரீதேவி(28). கூடுதல் வரதட்சணையாக கார் வாங்கி வருமாறு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தியதாக ஸ்ரீதேவி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தமிழ்முரசு |
| 495. | 13.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி அருகே வருவாய்துறை அதிகாரிகளின் வாகனசோதனையில் பெரிய கலையம் புத்தூர் பகுதியில் தனியாருக்கு சொந்தமான ஒரு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 300 மூடை ரேசன் அரிசி பறிமுதல். வடடிக்குப் பதிலாக குடும்ப கார்டுகளை அடகு வாங்கிக் கொண்டுள்ளதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். | ரேசன் அரிசி கொள்ளை & கந்துவட்டிக் கொடுமை | தமிழ்முரசு |
| 496. | 14.2.2011 | **சென்னை மாவட்டம்:** ஆவடியில் இருந்து கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்திற்கு (எம் 70ஏ) பேருந்தில் சீட்டுக்கு அடியில் பிறந்த 2 நாட்களே ஆன பச்சிளங் பெண் குழந்தை கிடந்தது. கண்டக்டர் புகார். திருமுல்லைவாயல் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சீனிவாசனிடம் குழந்தை ஒப்படைக்கப்பட்டது. | சிசுக்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 497. | 14.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை வனசரவாக்கம் காமகோடி நகர் 2 வது தெருவைச் சேர்ந்த நாகன்(45) மனைவி ராஜேஸ்வரி (35). கணவன் மனைவி இருவரும் வாக்கிங் சென்றனர். பின்தொடர்ந்து வந்த 2 நபர்கள் கணவனை தாக்கிவிட்டு மனைவி அணிந்திருந்த 8 பவுன் நகையை கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 498. | 14.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** பாலூர் மேல்மணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த முரளி(27) மனைவி சுகன்யா(20). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த முரளி சுகன்யாவை கத்தியால் குத்திக் கொலை | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்ததாக புகார். முரளி கைது. | | |
| 499. | 14.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** காமராஜபுரத்தைச் சேர்ந்த சரத்குமார் மகள் திவ்யா(20). திருப்பூர் செட்டிக்குட்டை குறிச்சிப்புதூரில் மில்லில் வேலை செய்கிறார். வேலைக்குச் சென்ற தனது மகள் திவ்யாவை அதே பகுதியைச் சேர்ந்த ஹரிகரன் கடத்திச் சென்றதாக திவ்யாவின் தாய் ஜெயக்கொடி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 500. | 14.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அருகேயுள்ள உக்கரம் குப்பன்துறையைச் சேர்ந்த 16 வயது இளம் பெண்ணை அதே பகுதியைச் சேர்ந்த மோகன்(24). திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல் வன்முறை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 501. | 14.2.2011 | **கோவை மாவட்டம்:** அரக்கோணத்தை சேர்ந்த ரவி மகள் கல்பனா கோவை புறநகர் பகுதியில் உள்ள கல்லூரியில் விடுதியில் தங்கி பிஇ2 ஆண்டு படித்து வந்தார். உணவை அறைக்கு எடுத்துச் சென்று சாப்பிட வார்டன் மறுத்ததைக் கேட்ட கல்பனாவை வார்டன் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 502. | 14.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஸ்ரீராமபுரத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணி மனைவி போதுமணி(40) மகன் ராஜசேகரன்(18). சில மாதங்களுக்கு முன்பிருந்து மனநிலை பாதிக்கப்பட்டிருந்த போதுமணி கிணற்றில் விழுந்துத் தற்கொலை. அவரைக் காப்பாற்ற சென்ற அவரது மகனும் மரணம். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 503. | 14.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி ரிசர்வ்லையன் பகுதியைச் சேர்ந்த பூமிநாதன்(62) மனைவி சரோஜா(58) இவர்களது மகன் மாரி மகேஷ்வரன்(32) மருமகள் சிவசக்தி(27) இருவரும் குடும்ப பிரச்சனையில் தற்கொலை. பேரக்குழந்தைகள் ராஜகணேஷ், ஸ்ரீதரணி இருவரையும் வளர்க்க தாத்தா, பாட்டி பரிதவிப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 504. | 15.2.2011 | **சென்னை மாவட்டம்:** | பெண்கள் மீதான | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கும்மிடிப்பூண்டி அடுத்த சூரப்பூண்டியைச் சேர்ந்த சாலமன்(25) மனைவி தேவகுமாரி(22). திருமணம் ஆகி 4 ஆண்டுகள் ஆன நிலையில் சாலமனுக்கு அதே பகுதியைச் சேர்ந்த கம்சலா(38) என்ற பெண்ணுடன் தொடர்பு. இதைக் கண்டித்த தேவகுமாரியை கொலை செய்து தூக்கில் தொங்கவிட்டதாக சாலமன் மீது தேவகுமாரியின் சகோதரர் ரோஸ் புகார். கணவர் சாலமன் மற்றும் அவரது தாய் ஏசுமணி கைது. | வன்முறை & கொலை | |
| 505. | 15.2.2011 | **சென்னை மாவட்டம்:** மணலி அருகே எலத்தனூரில் பள்ளி அருகே திறக்கப்பட்டுள்ள மதுக்கடையை அகற்றகோரி பொதுமக்கள் பலமுறை மனு கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 506. | 15.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவாலங்காடு அடுத்த எல்.வி.புரத்தைச் சேர்ந்த ராஜேஷ்(23) மனைவி சுமித்ரா(23). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த சுமித்ரா தூக்கிட்டுத் தற்கொலை. கணவன் மற்றும் மாமியார் பிளைசி(41) மாமனார் தேவதாஸ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 507. | 15.2.2011 | **பொள்ளாச்சி மாவட்டம்:** கோவை மதுக்கரை அருகேயுள்ள பிச்சனூர் செம்மாண்டம்பாளையத்தைச் சேர்ந்த மயிலவ்சாமி மகன் பொன்ராஜ்(17) அதே பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் பிளஸ்–2 படித்து வந்தார். வீட்டில் இருந்து வெளியே சென்றவரை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 508. | 15.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அருகே ஒத்தக்குதிரை பொம்மநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த செல்வராஜ் மனைவி ஸ்ரீதேவி. ஸ்ரீதேவி வரதட்சணைக் கொடுமை செய்வதாக செல்வராஜ் மீது புகார். விசாரணை என்ற பெயரில் காவலர்கள் துன்புறுத்துவதாக கலெக்டர் அலுவலகத்தில் செல்வராஜ் | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீக்குளிக்க முயன்றார். தீக்குளிக்க முயன்ற செல்வராஜை காவலர்கள் மீட்டு விசாரணை. | | |
| 509. | 15.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** சென்னிமலை அருகே மணிமலையைச் சேர்ந்த ஜீவானந்தம் மகன் தங்கவேல்(24) அதே பகுதியைச் சேர்ந்த லீலாவதி(22) இருவரும் காதலித்தனர். லீலாவதியின் பெற்றோர் திருமணத்திற்கு மறுத்ததால் காதலர்கள் இருவரும் திருமணம் செய்து சென்னிமலை காவல் நிலையத்தில் பாதுகாப்பு கேட்டு தஞ்சம். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 510. | 15.2.2011 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் மாணவிகள் விடுதி இயங்கி வருகிறது. 35 மாணவிகள் விடுதியில் தங்கி படித்து வருகின்றனர். இரவு உணவு சாப்பிட்ட சிறிது நேரத்தில் மாணவிகள் கிருபா(14), பழனியம்மாள்(14), துர்கா(113), மேத்தா(12) உள்ளிட்ட பல மாணவிகள் மயங்கினர். அதிகாரிகள் விசாரணையில் பல்லி விழுந்த உணவைச் சாப்பிட்ட மாணவிகள் மயங்கி விழுந்ததாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 511. | 15.2.2011 | **பாண்டிச்சேரி மாநிலம்:** கலாபேட்டில் பாண்டிச்சேரி பல்கலைக்கழக வளாகத்தில் மத்திய அரசின் கீழ் செயல்படும் கேந்திரவித்யாலாயாவில் படிக்கும் 8 வயது மாணவரை வகுப்பாசிரியர் லால்கிருஷ்ணா அடித்துச் சித்திரவதை. இந்திராகாந்தி பொதுமருத்துவமனையில் சிகிச்சை. | வகுப்பறை வன்முறை | Hindu |
| 512. | 15.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பழங்காநத்தத்தில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகத்தில் அதிகளவில் புரோக்கர்கள் தலையீடு இருப்பதாக புகார். லஞ்ச ஒழிப்பு காவலர்களின் அதிரடி சோதனையில் மோகன்ராமு, பாலசந்தர், பாண்டியராஜன், சுகுமாார் அவர்களிடம் இருந்து கணக்கில் வராத 5 ஆயிரம் பணம் பறிமுதல். | லஞ்சம் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 513. | 15.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அதிகாரிகள் அதிரடி சோதனையில் சார்பதிவாளர் பாலுச்சாமியிடம் ரூ.21 ஆயிரத்து 710, உதவியாளர் உமாராணியிடம் ரூ.4 ஆயிரத்து 750 ருபாய், அலுவலக உதவியாளர் மாாரியப்பனிடம் ரூ. 1,800 வெளிநபர்கள் கனகராஜிடம் ரூ. 700 ருபாய், கார்த்தியிடம் 1850 பறிமுதல். மொத்தம் ரூ.32 ஆயிரத்து 50 பணம் பறிமுதல். | லஞ்சம் | தினத்தந்தி |
| 514. | 15.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் தோட்டப்பாளையம் 3வது மேட்டுதெருவைச் சேர்ந்த அபூர்வ சிக்தர்(36) மனைவி அல்பனா(24). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த அபூர்வசிக்தர் மனைவியை கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 515. | 15.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** நத்தம் அருகே உள்ள பரளிப்புதூர் இந்திரா நகரில் தலித் குடியிருப்புகள் மீது சாதி ஆதிக்க சக்தியினர் பெட்ரோல் குண்டுகள் வீசித் தாக்குதல். 36 வீடுகள் சேதம். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 516. | 15.2.2011 | **மதுரை மாவட்டம்:** மலைவேடன் சமூக மக்கள் தங்களுக்கு இனச்சான்று வழங்கவேண்டும் என தமிழக அரசை கடந்த நான்கரை ஆண்டுகளாக தொடர்ந்த வற்புறுத்தி வந்தனர். | பழங்குடியினர் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 517. | 15.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி பாலாறு பொருந்தலாறு அணையில் 6 இடங்களில் மணல் எடுக்க அரசு நிர்ணயம் செய்துள்ளது. 2009 –10 ஆம் ஆண்டில் 96 ஆயிரம் யூனிட் மணல் எடுத்தது, ஒரு யூனிட்டுக்கு ரூ.800 வீதம் வசூலிக்கப்பட்டுள்ளது.<br>பொதுப்பணித்துறை கணக்கில் ஒரு யூனிட்டிற்கு ரூ.313 வீதம் 12 ஆயிரம் வசூல். மொத்தம் ஏழரை கோடி ரூபாய் சுருட்டப்பட்டுள்ளதாக மார்க்சிஸ்ட் கட்சியினர் புகார். | மணல் கொள்ளை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 518. | 15.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி சின்னமனூர் கருப்பசாமி கோயில் தெருவைச் சேர்ந்த கணபதியப்பன் மகன் ஜெயராம்(28) சீர்காழியைச் சேர்ந்த கலைச்செல்வன் மகள் சரண்யா(23) இருவரும் இன்டர்நெட் மூலமாக காதலித்து திருமணம் செய்தனர். ஜெயராம் வீட்டில் இல்லாத போது சரண்யாவின் பெற்றோர் சரண்யாவை அடித்து கடத்திச் சென்றதாக ஜெயராம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 519. | 15.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி தேவாரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தே. சிந்தலைச்சேரி, லட்சுமிநாயக்கன்பட்டி, அழகர்நாயக்கன்பட்டி, தே,மீனாட்சியுரம் ஊர்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து செல்கின்றனர். கர்ப்பிணிகள் மாதந்தோறும் பரிசோதனை செய்து டாக்டர்கள் ஆலோசனைப்படி சிகிச்சை பெறுகின்றனர். இங்கு பெண் டாக்டர் இல்லாததால் கர்ப்பிணிப் பெண்கள் ஆண் டாக்டரிம் தங்களது பிரச்சனைகளை கூற தயங்குவதாகவும் பெண் டாக்டர் நியமிக்கப்பட வேண்டும என பொதுமக்கள் புகார். | மருத்துவர் அலட்சியம் | தமிழ்சுடர் |
| 520. | 15.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் வந்தவாசி காவல் நிலையக் காவலர்கள் கொலை வழக்குத் தொடர்பாக காவலர்கள் 4 பேரை கைது செய்தனர். காவல் நிலைய சித்திரவதையில் கைதி தினேஷ் மரணம். | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கரன் |
| 521. | 16.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கணபதி சத்திரோட்டில் வசிக்கும் P.K.கணேசன். இவரது மோட்டார் தொழிற்சாலையில் திருட்டு நடந்தது தொடர்பாக காவல் நிலையத்தில் கணேசன் புகார் செய்தார். கணபதி காவல்நிலைய ஆய்வாளர் சிவகுமார் ரூ. 60,000 ஆயிரம் லஞ்சம் கொடுத்தால் மட்டுமே புகார் பதிவு செய்ய முடியும் என்று மிரட்டியதாக கணேசன் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார். காவல் | காவல் நிலையச் சித்திரவதை | டெக்கான் கிரானிக்கல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆய்வாளர் சிவகுமார் கைது. | | |
| 522. | 16.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** கூடுவாஞ்சேரி அடுத்த மாடம்பாக்கம் பாரதி நகரைச் சேர்ந்த 11 வயது சிறுமி அங்குள்ள அரசு பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தார். பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்த மாணவியை மாடம்பாக்கம் குத்தனூர் சாலையில் கைரேகை பார்க்கும் ஜோதிடர் திருநாவுக்கரசு(72) ஜோதிட நிலையத்துக்குள் அழைத்துச் சென்று ஒரு பெண்ணுடன் சேர்ந்து குளிர்பானம் கலந்த மதுவை ஊற்றி பாலியலுக்கு முயற்சி. தப்பி வந்த மாணவி சாலையில் மயங்கி விழுந்தார். பொதுமக்கள் ஜோதிடரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 523. | 16.2.2011 | **கோவை மாவட்டம்:** திருநின்றவூர் அடுத்த நடுக்குத்தகை அண்ணா தெருவைச் சேர்ந்த சுதாகர்(33) மனைவி ஜெயஸ்ரீ(25). மனைவியின் நடத்தையில் சந்தேகப்படட சுதாகர் ஜெயஸ்ரீயை கத்தியால் குத்திக் கொலை செய்தாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 524. | 16.2.2011 | **பொள்ளாச்சி மாவட்டம்:** பொள்ளாச்சி அடுத்த நரசிங்காபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் மனைவி பகவதி(25). தீராத வயிற்றுவலியால் மனமுடைந்த பகவதி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 525. | 16.2.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் வீரபாண்டி வஞ்சி நகரைச் சேர்ந்த ரங்கசாமி மகள் கன்னியம்மாள்(20) பனியன் கம்பெனியில் டெய்லராக வேலை பார்த்தார். கருப்பகவுண்டம்பாளையம் பகுதியைச் சேர்நத ரிஸ்வானாபேகம்(20). வேலைக்குச் சென்ற இரு பெண்களை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 526. | 16.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** திண்டுக்கல்லைச் சேர்ந்த லட்சுமி மகள் கீதா(21) நர்சிங் பயிற்சி முடித்துவிட்டு கோபியில் ஒரு மருத்துவமனையில் பயிற்சி பெற்றார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கீதாவை காணவில்லை என லெட்சுமி புகார். | | |
| 527. | 16.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** கடத்தூர் அடுத்துள்ள அரசூர் பி.மேட்டுபுதூரைச் சேர்ந்த வெள்ளியங்கிரி(40) மனைவி பூங்கொடி(30). வீட்டில் இருந்த பூங்கொடியை காணவில்லை என வெள்ளியங்கிரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 528. | 16.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு பிசப் ரோட்டில் தனியார் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் 900 குழந்தைகள் படிக்கின்றனர். எல்.கே.ஜி., முதல் 5ம் வகுப்பு கல்விக்கட்டணமாக ரூ.4,500 ருபாய் மட்டுமே வசூலிக்கவேண்டும் என அரசு நிர்ணயித்துள்ளது. ஆனால் நிர்வாகம் எல்.கே.ஜி.க்கு 13,200 ருபாயும், 4 மற்றும் 5 வகுப்புகளுக்கு 15,300 வசூலிப்பதாக பெற்றோர் கல்வித்துறை அதிகாரிகளுக்கு பலமுறை மனு கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் புகார். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 529. | 16.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிவகங்கை பாதை அரசு குவாரியில் மணல் அள்ளப்பட்டு மதுரையில் ரூ.4500க்கு விற்கப்படுகிறது. மணலை எடுத்து வரும் லாரி டிரைவர்கள் ரூ. 300 முதல் 500 பெற்று சரக்கு ஆட்டோக்களில் ஒரு டன் மணலை, ரூ.1500க்கு விற்பனை. | மணல் கொள்ளை | தினமலர் |
| 530. | 16.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** நாகப்பட்டினத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் துப்பாக்கி முனையில் 16 படகுகளை சிறைப்பிடித்தனர். படகுகளில் இருத 106 மீனவர்களை கைது செய்தனர். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமணி |
| 531. | 16.2.2011 | **தேனி மாவட்டம்:** போடி அருகே தர்மத்துப்பட்டியைச் சேர்ந்த செல்வம்(35) மனைவி புவனேஸ்வரி(28). குழந்தைகள் மணிப்பிரியா(13) மணிகண்டன்(6). | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவன் மனைவி குடும்பத் தகராறில் தன் இருகுழந்தைகளுக்கு சாப்பாட்டில் விஷம் கலந்து கொடுத்து கொலை செய்ய முயன்றதாக செல்வம் மீது புவனேஸ்வரி புகார். | | |
| 532. | 16.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி உத்தமபாளையத்தில் தலித்துகள் தனியான சுடுகாட்டில்தான் பிணங்களைப் புதைக்க வேண்டும் எனவும், பிற சாதி இந்துகளுக்கான சுடுகாட்டில், பிணத்தை புதைக்ககூடாது என வருவாயத்துறை கோட்டாட்சியர் முன்னிலையில் கூட்டம் நடைப்பெற்றது தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |
| 533. | 16.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மூன்றுமாவடியில் இபிஜி மெட்ரிக்குலேசன் பள்ளியில் 1500 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இப்பள்ளியில் செலுத்திய பணத்திற்குரிய ரசீது கொடுக்காமல் குறைந்த அளவு தொகைக்கான ரசீது தந்ததைக் கண்டித்த பெற்றோர்கள் பள்ளியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம். | வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 534. | 16.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆர்வார்புரம் வைகை வடகரையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்ற சுப்புடு(29) திருட்டு வழக்கில் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். பாலசுப்பிரமணியம் சிறையில் தற்கொலைக்கு முயற்சி. | சிறைச்சாலை வன்முறை | தினகரன் |
| 535. | 16.2.2011 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் அருகே தெற்கியூரைச் சேர்ந்த சசிக்குமார்(30) தனது பாட்டிக்கு சொந்தமான விவசாய நிலத்தை தனது பெயருக்கு மாற்ற சிங்களாந்தபுரம் விஏஓ ரத்தினத்தை(45) அணுகினார். பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ. 2,000 லஞ்சம் கேட்டதாக விஏஓ ரத்தினம் மீது சசிக்குமார் புகார். விஏஓ ரத்தினம் கைது. | லஞ்சம் | தினகரன் |
| 536. | 17.2.2011 | **திருவள்ளூர்** | பெண்கள் மீதான | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **மாவட்டம்:** மாங்காடு காமாட்சியம்மன் தெருவில் வசிப்பவர் ரவிராஜ்(50) மகள் மோகனாதேவி(23). மோகனாதேவி சம்மதமின்றி பெற்றோர் திருமண ஏற்பாடு செய்ததால் மனமுடைந்த மோகனாதேவி தீக்குளித்துத் தற்கொலை. | வன்முறை & தற்கொலை | |
| 537. | 17.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை குனியமுத்தூரில் நிர்மல் மாதா அனாதை சிறுவர் இல்லத்தில் படிக்கும் சிறுமியை காணவில்லை என இல்ல நிர்வாகி லிபியா காவல் நிலையத்தில் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 538. | 17.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** அந்தியூர் அருகேயுள்ள ஈசப்பாறை பகுதியைச் சேர்ந்த நல்லசாமி மனைவி அம்சவேணி(35) குடும்ப பிரச்சனை காணரமாண அம்சவேணி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 539. | 17.2.2011 | **கோவை மாவட்டம்:** டாப்சிவில் கிராமத்தில் உள்ள பழங்குடியின குழந்தைகள் படிக்கும் பள்ளியில் கடந்த இருபது ஆண்டுகளாக ஓராசிரியர் மட்டுமே பணிபுரிகிறார். மாணவர்கள் நன்கு படிக்கமுடியாமல் அவதி. பல நாட்கள் ஆசிரியரும் வருவதில்லை. | வகுப்பறை வன்முறை | டெக்கான் கிரானிக்க ல் |
| 540. | 17.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் அரசுபள்ளி வளாகத்திற்குள் உள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதியில் ஒன்று முதல் பிளஸ் 2 வரை அரசு பள்ளியில் படிக்கும் 71 மாணவர்கள் படிக்கின்றனர். வார்டன், 2 ஆண் சமையலாளர் தவிர துப்புரவு, வாட்ச்மேன் பணிக்கென ஆட்கள் நியமிக்கப்படாததால், இப்பணிகளையும் மாணவர்கள் செய்வதால் படிப்பில் கவனம் செலுத்த முடியாத நிலையில் உள்ளதாக மாணவர்கள் புகார். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 541. | 17.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை வடவள்ளி தொண்டாமுத்தூர் மெயில்ரோட்டில், ஹெர்ஹெவன் மகளிர் விடுதி உள்ளது. விடுதிக்குள் மர்ம நபர்கள் நுழைந்து 55 பவுன் | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நகையை கொள்ளையடித்ததோடு பெண்களை கொலை மிரட்டல். | | |
| 542. | 17.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே பூவந்தி கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் (எ) சந்தோஷ்குமார் சந்தோஷ்குமார் மீது தஞ்சை, தமிழ் பல்கலை காவல்நிலைய இன்ஸ்பெக்டர் முத்தரசு மற்றும் தலைமை காவலர்கள் சம்பந்தம், விஸ்வநாதன், நாகராஜன் பொய் வழக்கு போட்டதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொய் வழக்க போட்டதற்கு நஷ்டஈடு கேட்டு சந்தோஷ்குமார் மனித உரிமைகள் கமிஷனில் மனு தாக்கல். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 543. | 17.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கூடல்நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம்(51) மனைவி ஜெயராணி(46). கடன் தொல்லையால் மனமுடைந்த ஜெயராணி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை & கந்துவட்டிக் கொடுமை | தினமலர் |
| 544. | 17.2.2011 | **மதுரை மாவட்டம்:** விருது நகரைச் சேர்ந்த சீனிவாசன் என்ற தங்கப்பநாயக்கர், வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் சிறையில் சாப்பிட மறுத்து உண்ணாவிரதம் இருந்ததால் மயக்கமடைந்து சிகிச்சைக்கு மருத்துவமனையில் அனுமதி. | சிறைச் சாலை வன்முறை | தினமணி |
| 545. | 17.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காளையார்கோவில் அருகே விளாங்காட்டூர், நாட்டார்கால் ஆற்றுப்பகுதியில் அனுமதியின்றி மணல் அள்ளியதாக 4 டிராக்டர்கள், ஒரு ஜே.சி.பி இயந்திரம் பறிமுதல். | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |
| 546. | 17.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கரிமேடு மில்காலனியைச் சேர்ந்த தென்னாடு மகள் செல்லமணி(18). ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றுவந்தார். செல்லமணியை செந்தில் மற்றும் அவரது குடும்பத்தார் கடத்திச் சென்றதாக தென்னாடு | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புகார். | | |
| 547. | 17.2.2011 | **தேனி மாவட்டம்:** போடியில் பள்ளிகளுக்கு அருகில் அரசு மதுக்கடை உள்ளதால் மாணவிகள் பாதிப்பு. மதுக்கடைகளை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை. | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 548. | 17.2.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் அருகே வில்வநத்தத்தில் தரம்மற்ற சாலை போட்டதை இராமகிருஷ்ணன் தட்டி கேட்டுள்ளார். கோபம் அடைந்த ஊராட்சி மன்ற தலைவி தேவகியின் கணவர் சிவப்பிரகாசம், ராமகிருஷ்ணனின் குடும்பம் உட்பட 3 குடும்பங்களுக்கு மின்சாரம், குடிநீர் துண்டிப்பு. மேலும் ஊரை விட்டு ஒதுக்கி வைப்பதாக அறிவிப்பு. | கட்டப்பஞ்சாயத்து & சமுகப்புறக்கணிப்பு | சன்நியூஸ் |
| 549. | 17.2.2011 | **கோவை மாவட்டம்:** உடுலை அருகே உள்ள அமராவதி அணையில் மணல் கொள்ளை அதிகளவில் நடைபெறுவதாக பொதுமக்கள் புகார். | மணல் கொள்ளை | வித்யாசாகர் |
| 550. | 17.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை மாநகரத்தில் கட்டப்பஞ்சாயத்து செய்யும் காவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கமிஷனர் சைலேந்திரபாபு எச்சரிக்கை. | காவல் நிலையச் சித்திரவதை | வித்யாசாகர் |
| 551. | 17.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சரவணம்பட்டி சட்டம்–ஒழுங்கு பிரிவு இன்ஸ்பெக்டர் சிவக்குமார்(38) கணேசன் என்பவரிடம் லஞ்சம் வாங்கும்போது லஞ்ச ஒழிப்பு காவலர்களால் கைது. லஞ்ச வழக்கில் கைதான இன்ஸ்பெக்டர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் தவறான தகவல் கொடுத்ததாக மேலும் ஒரு குற்றச்சாட்டு இன்ஸ்பெக்டர் சிவகுமார் மீது புகார். | லஞ்சம் | வித்யாசாகர் |
| 552. | 17.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வாலாஜாவட்டம், ராணிப்பேட்டை அடுத்த சேர்க்காடு கிராமத்தைச் சேர்ந்த பாபு மகன் லோகநாதன் அதே பகுதியைச் சேர்ந்த ரவி மகள் கல்பனா இருவரும் காதலித்து வந்தனர். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் பாஸ்கர் (3.2.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கல்பானாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் கல்பனா தூக்குப்போட்டுத் தற்கொலை. | | |
| 553. | 17.2.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** செங்கம் வட்டம், பின்சூர் கிராமத்தைச் சேர்ந்த ரகுநாதன் மகள் உமாமகேஸ்வரி. குடும்பப் பிரச்சனை காரணமாக உமாமகேஸ்வரி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் பாஸ்கர் (3.2.11) |
| 554. | 17.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அரக்கோணம் அடுத்த வடமாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த கன்னியப்பன்(35) மனைவி பிரியா(28). மனைவியின் நடத்தையில் சந்தேப்பட்டு கணவன் மனைவி இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த கன்னியப்பன் பிரியாவை கத்தியால் குத்தி கொலை முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினகரன் பாஸ்கர் (6.2.11) |
